www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 14 | செப்ரெம்பர் 2006 | பக்கம் 12 | விலை 15/- | சுழற்சி 95


## யார் இவர்கள்? இங்கு என்ன செய்கிறார்கள்?


ஸ்ரீபன் மான்


பெனிட்டா பெரேரோ


யசூசி அகாசி


ஹென்சன் பௌர்


மன்மோஹன் சிங்


சௌகத் அஸீஸ்

# போர்க்களத்தில் அந்நிய சக்திகளின் பலப்பரீட்சை

2002 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் யுத்த நிறுத்தம் அமுலில் இருப்பதாக கூறப்பட்டபோதும் இரு தரப்பினரின் நடவடிக்கைகளும் யுத்த நிறுத்த மீறல்களாக அறிக் கை செய்யப்பட்டுள்ளன. கடத்த ல்கள், கைதுகள், கொலைகள், தாக்குதல்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன.

2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தாக்குதல்கள் உக்கிரமடைந்தன. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் பத்திரிகையாளர்கள், தமிழ் வர்த்தகர்கள், பிரமுகர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்ட பல தமிழர்கள் பற்றி தகவல்களே இல்லை. வடக்கு கிழக்கில் படை யினரை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல்கள் இடம் பெற்று வந்தன.

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் மட்டுமன்றி திருகோணமலை மாவட்டச் செயலாளரும் இரா ணுவ அதிகாரியாக இருந்தவரா வார். இது நிர்வாகத்திலும் இரா ணுவ ஆதிக்கத்தை வெளிப்படுத் துகிறது.

கடந்த யூலை மாதப் பிற் பகுதியில் கிழக்கு மாகாண த்தில் மாவிலாறு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் விநியோகத்தை விடுதலை புலிகள் இயக்கம் துண்டித்தது. அப் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு நீர் விநியோகம் இல்லை யென்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அப்பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கென கட்டித் தருவதாக ஒத்துக் கொள்ளப்பட்ட நீர் விநியோகத் திட்டத்தை கட்ட அரசாங்கம் அனுமதி வழங்கவில்லையென்றும் அப்பகுதி தமிழ் மக்கள் அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதிக்கவில்லையென்றும் குற்றஞ்சாட்டி அவற்றை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலேயே மாவிலாறு நீர் விநியோகத்தை திறப்பதென புலிகள் இயக்கம் கூறியது.

இதனை அடுத்து மாவிலாறு சம்பூர் பகுதிகளில் மட்டுமன்றி கிளிநொச்சிப் பகுதிகளிலும் அர சாங்கம் விமானக் குண்டு வீச்சு களை செய்தது. மாவிலாற்றுப் பகுதியில் புலிகள் இயக்கத்திற்கும் அரச படைகளுக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக மூதூர் பகுதி யில் கடுமையான தாக்குதல் களை நடத்தி அப்பகுதியைக் கைப்பற்றிய புலிகள் இயக்கம் இரண்டு நாட்களுக்குப் பின்னர் அதிலிருந்து வெளியேறியது. இத் தாக்குதலினால் மூதூரிலி ருந்து முஸ்லிம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மூதூர் கிழக்குப் பகுதியிலிருந்து தமிழ் மக்கள் வெளியேறினர். அவ்வேளை முஸ்லிம் மக்கள் புலிகள் இயக்கத்தால் துன்புறுத்தப்பட்டதாக முஸ்லிம் தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். 'ஜிகாத்' என்ற இயக கத்தினர் என்று சந்தேகிக்கப்படும் ஐம்பதிற்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் புலிகள் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் இன்னும் விடுவிக்கப் படவில்லை என்றும் கூறப்படுகிறது.

புலிகள் இயக்கம் மூதூர் பகுதியில் தாக்குதலை நடத்தி, இராணுவத்தினரைத் திசை திருப்பினர் என்று கூறப்பட்டடது. மாவிலாறு நீரை புலிகள் இயக்கம் திறந்துவிட்டதாக அவ்வியக்கம் கூறுகிறது. இராணுவம் திறந்து விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது.

நீர் விநியோகத்திற்காக புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத் திக் கொண்டிருக்கும் போது அரசாங்கமே யுத்தத்தை தொடங்கியதென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. நீரை புலிகள் இயக் கம் திறந்து விட்ட பிறகும் அரசாங்கம் அப் பகுதிகளில்

தொடர்ச்சி 3ம் பக்கம் ⇨

## செஞ்சோலையில் கருக்கப்பட்ட மலர்கள்


சிறுவர்கள் படையில் சேர்க்கப்படுதை எதிர்ப்பவர்கள் இவர்களை இப்படி கொல்லலாமா?

## போரினால் இடம் பெயர்ந்த மூதூர் மக்கள்



www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லீம் அமைச்சர்கள் பெருமைப்பட என்ன இருக்கிறது?

முஸ்லீம் தலைவர்கள் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பது எவ்வளவு சரியானது என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சராக இருக்கும் முஸ்லீம் தலைவர் ஒருவர் அறிக்கை விட்டுள்ளார்.

அரசபடைகளுக்கும்- புலிகள் இயக்கத்தினருக்கும் கிடையிலான யுத்தத்தினாய் மூதூரிலிருந்து இடம் பெயர்ந்து கந்தளாயில் இருக்கும் முஸ்லீம் மக்களுக்கு முஸ்லீம் அமைச்சர்கள் மூலமே நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படதாக பெருமைப்பட்டுக் கொண்டே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.


இடம் பெயர்ந்த மக்கள் அவர்களது இயல்பு வாழ்க்கை மறுக்கப்பட்ட நிலையில் நீருக்கும், உணவிற்கும், கழிவிடத்திற்கும் பட்ட- படுகின்ற பாட்டினை அவதானித்தால் எவரும் பெருமைப்பட முடியாது. மக்களை அகதிகளாக்கி, அவர்களை கையேந்த வைத்து அந்தக் கைகளுக்கு உணவையும், உடையையும் கிள்ளிப்போடும் நிலைமை மிகவும் அவலமானது. தன்மானத்திற்கு இழுக்கானது. அதில் பெருமைப்படுவதற்கு எதுவுமில்லை. அரசாங்கத்தின் அமைச்சர்களாக இருப்பதை நியாயப்படுத்துவதற்காக அவர்கள் வேண்டுமென்றால் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இடம் பெயர்ந்து அகதிகளாக இருக்கும் முஸ்லீம் மக்கள், அமைச்சர்களின் கொடைத் திறன் பற்றி அதிகம் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியாது.

அரசாங்கத்திடமிருந்து பொருட்களையும் சலுகைகளையும் பெற்று அவற்றை இடம் யெர்ந்தவர்களுக்கு கொடுப்பதில் மேட்டுக்குடி முஸ்லீம் தலைவர்கள் சிலருக்கு பெருமையாக இருக்கலாம். ஆனால் சாதாரண பெரும்பான்மையான முஸ்லீம் மக்களுக்கு பெருமை தரக்கூடிய விடயமல்ல.

வடக்கு கிழக்கிற்கு வெளியிலும் முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு பிரச்சினை வடக்கு கிழக்கிலும் அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. முஸ்லீம்கள் பாதுகாப்புடன் வாழ வழி செய்யாத எந்த ஒரு அமைச்சுப் பதவியிலும் எவர் இருந்தும் பிரயோசமில்லை.

■

# தோழர் 'மான்' முத்தையாவுக்கு பிரியாவிடை



மறைந்த தோழர் 'மான்' முத்தையா தனது இளமைக்காலம் தொடக்கம் சகல விதமான அடக்குமுறைக் கொதிராகவும் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்காகவும் அயராது உழைத்த ஒரு தோழர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவராக இருந்த தோழர் 'மான்', காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் ஆரம்பவேலைகள் நடைபெற்ற 1950ம் ஆண்டிலே அத்தொழிலாளர்களை இணைத்து ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட காரணத்தினால் வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

1960 காலப்பகுதியில் சங்கானைப்பட்டின சபையின் தலைவராக தேர்தெடுக்கப்பட்டார். அக்காலப் பகுதியில் முனைப்புப் பெற்றிருந்த சாதியொடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தில் முன்னணிப் போராளியாக விளங்கினார். சாதி வெறியர்களின் கொடுமை காரணமாக தொழில், சொத்துக்கள் இழக்க வேண்டியும் ஏற்பட்டது. எனினும் சகல விதமான அடக்குமுறைக்கு எதிராகவும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களையும் அவர்களுக்கு ஆதாரமான அனைத்து சக்திகளையும் ஒன்றிணைப்பதிலும் அதற்கான போராளிகளுக்கு வழிகாட்டி ஊக்கம் கொடுப்பதிலும் உத்தம தோழராக செயற்பட்டார்.

கொம்யூனிஸ்ட் இயக்கத்தில் சர்வதேச ரீதியாகவும் உள் நாட்டிலும் ஏற்பட்ட கோட்பாடு ரீதியான போராட்டத்தில் புரட்சிகர மாக்ஸிச லெனினிஸ பாதையை தனது பாதையாக தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு ஏற்ற வழியாக சமாதான சகஜீவன பாராளுமன்ற பாதையை நிராகரித்து தோழர் சண்முகதாஸன் தலைமையிலான புரட்சிகர போராட்ட மார்க்கப் பாதையின் பக்கம் தன்னை இணைத்துக் கொண்டவர். தொடர்ச்சியாக பாராளுமன்றப் பாதையை நிராகரித்து புரட்சிகரமான கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளை முன்னெடுப்பதில் தளராது உழைத்தார். 1971ம் ஆண்டில் நடைபெற்ற ஜே. வி. பியின் ஆயுதக்கிளர்ச்சியின் போது பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

நிலவுடைமைக்காரருக்கு எதிராக குத்தகை விவசாயிகளின் போராட்டங்களில் குத்தகை விவசாயிகளின் பக்கமாக நின்று தனது பாட்டாளிவர்க்க உணர்வினை கோடிட்டுக் காட்டி வந்தார். சர்வதேச ரீதியாக கொம்யூனிஸ்ட் இயக்கம் பின்னடைவுகளை சந்தித்த போதிலும் மக்களின் விடுதலைக்கு மாக்ஸிஸ லெனினிய மாஓ சேதுங் சிந்தனை வழியிலான பாதையே சரியான மார்க்கம் என்பதை ஏற்றும் வலியுறுத்தியும் வந்தவர். இதன் காரணத்தால் தனது இறுதிக்காலம் வரை புதிய- ஜனநாயக கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

இவரின் மறைவு விடுதலையை விரும்பும் அடக்கப்பட்ட மக்களுக்கு பேரிழப்பாகும். இவரின் மறைவால் துயருதும் அவரது குடும்பத்தினர் உறவினர் நண்பர்கள் தோழர்களுக்கு கட்சி தனது ஆறுதலை தெரிவித்துக் கொள்வதுடன் அவர் ஏற்றுக் கொண்ட மாக்ஸிஸ லெனினிய மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டலின் வழியில் செல்லும் உறுதியினைப் பிரகடனப்ப டுத்துகிறது.

■

# பேரினவெறியர்களால் எரியூட்டப்பட்ட செஞ்சோலை

செஞ்சோலை என்பது போரினால் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளின் இல்லம். இது தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தினால் நடத்தப்படுகிறது. இதன் மீது ஆகஸ்ட் 14 ஆம் திகதி இலங்கை விமானப்படை குண்டு வீசியது. இதனால் 61 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இது ஆயுதப்பயிற்சி அளிக்கப்படும் இடமல்ல என்பது இலங்கை அரசாங்கத்தையும் பேரின வெறியர்களையும் தவிர வேறு எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

சம்பவ தினத்தன்று முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கான பயிற்சி பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

இங்கு த. வி. பு. இ தலைவர் வே. பிரபாகரன் அடிக்கடி வந்து போவதாகவும் சம்பவ தினம் செஞ்சோலையில் சனநடமாட்டமாக இருந்ததால் அவர் அங்கு இருப்பார் என்றே விமானக் குண்டுத்தாக்தல் நடத்தப்பட்டுள்ள தாக கூறப்படுகின்றது.

சிறுவர்கள் படையில் சேர்க்கப் படுவதை பற்றி பாரிய கண்டணங்களை இலங்கை அரசாங்கம் செய்து வருகிறது. அதற்கு உண்மையிலே சிறுவர்கள் மீது அக்கறை இருப்பின் இப்படி சின்னஞ் சிறுசுகளை கொன்று குவித்திருக்குமா?

இதனை இதயமுள்ள எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நாளாந்தம் பலரும் கொலை செய்யப்படுகின்றனர். அதில் இக்கொலை மிகவும் குருரமானதாகும். இதனை கண்டிப்பதற்கு ஒருவர் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திற்கு நூற்றுக்கு நூறுவீதம் உடன்பாடு கொண்டிருக்கத் தேவை இல்லை. சில முன்னாள் தமிழீழ போராட்ட வீரர்கள் இது குறித்து கவலை கொள்ளாவிட்டாலும் ஆனந்தம் கொள்ளாதிருப்பார்களாக.

■

# நாளும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## தமிழருக்கு என்ன குறை?

மாவிலாறு பிரச்சினையின் தொடர் விளைவாகப் பாதிக்கப்பட்டோர் பற்றி ரணில் விக்கிரமசிங்ஹ ஓகஸ்ற் 06ம் திகதி கூட்டமொன்றிற் பேசும் போது பாதிக்கப்பட்டோர் சிங்களவராயினும் முஸ்லிம்களாயினும் அவர்களது தேவைகள் பற்றிக் கவனங் காட்டப்பட வேண்டுமென்று கூறியிருந்தார். நிச்சயமாகப் பாதிக்கப்பட்டவர்களில் தமிழர் இருந்திருக்கக் கூடுமென அவர் ஊகித்திருக்கக் கூட மாட்டார் என நம்புவோமாக.

## அவர்கள் மட்டும் அதிகாரத்திலிருந்தால்!

யூஎன்.பி. ஆட்சியிலிருந்த போது 1991ம் ஆண்டு மாவிலாறு அணையைத் தங்கள் வசமாக்கியதாக யூஎன்.பியின் தலைவர் வீரம் பேசியிருக்கிறார். இவ்வாறான பேச்சு இதுதான் முதலாவது முறையல்ல. யூஎன்.பி 1994ல் தேர்தலில் தோற்றதாலேயே பெருமளவிலான பிரதேசம் விடுதலைப் புலிகள் வசமானது என்பது யூஎன்.பி தலைமையின் வாதமாக எப்போதும் இருந்து வந்துள்ளது. அமைதி பற்றிப் பேசும் போது அது பேசப்படுவதில்லை. ஆனால் ஸ்ரீ. ல. சு கட்சியை விடத் திறமாகத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை அடக்க வல்லோர் தாமென்று போர்ச் சூழல்களில் வீரம் பேசுவார்கள். இவ்வாறான பேச்சுக்களை ஏன் தமிழ் ஊடகங்கள் எனப்படுவன தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை?

## அவர்கள் விசாரிப்பார்கள்

மூதூரில் ஒரு என்.ஜி.ஓவைச் சேர்ந்த பதினேழு தமிழ் முஸ்லிம் ஊழியர்கள் அருகிலிருந்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். சாட்சிக்கு ஆளில்லாத துணிவில் அரச படையினர் விடுதலைப் புலிகள் மீது பழியைப் போட்டு விட்டுத் தப்பிச் செல்லப் பார்க்கின்றனர். சந்தர்ப்ப சூழ்நிலைகள் குற்றவாளிகள் அரச படையினர் என்றே நம்புமாறு தூண்டுகின்றன. என்.ஜி.ஓக்களின் அந்நிய எசமானர்களைச் சாந்தப்படுத்த அது பற்றி விசாரணை நடத்தப் போவதாகச் சனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. விசாரணைகட்கு என்ன நடக்குமென்று எல்லாருக்கும் தெரிந்தது தானே.

இது வரையிலான விசாரணைகள் பற்றி ஒரு விசாரணை நடத்த வேண்டிய நிலையை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

## ஓநாயின் வேட்டைப் பற்கள

1.08-08-2006 டெய்லி மிரரில் பயங்கரவாதம் பற்றி முனனாள் இஸ்ரேலியப் பிரதமரும் தீவிரமான இஸ்ரேலிய விஸ்த்தரிப்ப வாதியும் பலஸ்தீன மக்கள் மீது கடுமையான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டவருமான பென்யாமின் நெத்தென்யாகுவின் சொற்கள் "இன்றைய மேற்கோள்'' என்று கொட்டை எழுத்தில் பிரசுரமாகியிருந்தது. பயங்கரவாதிகளை எவ் வகையிலும் திருப்திப்படுத்த இயலாது என்றும் பயங்கரவாதிகளது நோக்கம் தமது (அதாவது இஸ்ரேலிய) சமுதாயத்தை முற்றாகச் சிதைப்பதே என்றும் அவர் சொன்னதை மேற்கோள் காட்டும் நோக்கம் என்ன? இது போன்ற மேற் கோள்கள் அண்மைக் காலமாக அதிகளவில் டெய்லி மிரரில் வருகின்றன.

2.டெய்ஸி மிரரை வெளியிடும் 'விஜய்' நிறுவனத்தின் பேரினவாதம் இரகசியமானதல்ல. என்றாலும் டெய்லி மிரர் ஐலன்டுடன் ஒப்பிடுகையில் நிதானமானது என்ற மதிப்பீடு இருந்து வந்தது. ஆங்கிலமறிந்த தமிழ் வாசகர்களைக் கவர அது உதவியது. எனினும் பேரினவாதச் சிங்கள வாசகர்களது எண்ணிக்கை தமிழ் வாசகர்களினதை விட அதிகமல்லவா. அவர்களை இழக்கவோ தனது பேரினவாதத்தைத் தலை முழுகவோ விஜய் நிறுவனம் ஆயத்தமாக இல்லை என்பதையே அண்மைக் காலமாக டெய்லிமிரரின் போக்குக் காட்டி நிற்கிறது. டெய்லி மிரர் என்ற ஆட்டுத் தோல் போர்த்த ஓநாயின் வேட்டைப் பற்கள் அடிக்கடி தெரியத் தொடங்கி விட்டன.

## ஜே.வி.பியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு

ஜே.வி.பி. தனது இடதுசாரித் தோற்றத்தைக் காட்டிக் கொள்ள வேண்டி பலஸ்தீனத்தின் மீதும் லெபனான் மீதுமான தாக்குதல்களைக் கண்டித்து அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் ஒரு சிறு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. அதைக் கூட ஐலன்ட் வாசகர் ஒருவருக்குத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அமெரிக்காவின் உதவியுடன்தான் புலிகளை விழுத்தலாம். அப்படியிருக்க அமெரிக்காவைத் தாக்குவது தவறு என்று கண்டித்திருந்தார். ஆனால் ஜே.வி.பியின் அமெரிக்க எதிர்ப்பு அரசாங்கத்தின் குண்டு வீச்சுக்களை விட அளவறிந்து செய்யப்படுவது என்று எல்லாரும் அறிவர்.

ஏன் இதுவரை எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் இஸ்ரேலின் நடத்தையையும் அதற்கு அமெரிக்கா வழங்கும் ஊக்குவிப்பையுங் கண்டித்து ஒரு கண்டனப் பிரேரணையையேனும் பாராளுமன்றத்தில் முன் வைக்கவில்லை? முஸ்லிம் எம்பிக்களின் பம்மாத்து ஜே.வி.பியினருக்குச் சிறிதும் சளைத்ததல்ல. முடிவில் எல்லாக் கட்சி எம்பிக்களுக்கும் எசமான் அமெரிக்கா தானே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## போர்க்களத்தில்...

1ம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதல்களை நிறுத்தவில்லை என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்து ள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பகுதிகளில் புலிகள் இயக்கம் போர் நிறுத்தக் காலத்திலேயே புதிய முகாம்களை அமைத்துள்ளதாக கூறி அவற்றை அழித்து அப்பகுதிகளை கைப்பற்றும் வரை தாக்குதலை நிறுத்தப் போவதில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கிளிநொச்சிப் பகுதிகளிலும் அராசாங்க விமானப் படைகள் குண்டு வீசுகின்றன.

நடைபெறும் தாக்குதல்களை யுத்தம் என்றவகையில் நடத்தவில்லை என்றும் அவை புலிகளின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல் என்று அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல்களை நடத்துவதாக புலிகள் இயக்கமும் தெரிவித்து வருகிறது. புலிகள் இயக்கப் பகுதிகளை கைப்பற்றுவது தமது நோக்கமல்ல என அரசாங்கப் படையினரும், அரசாங்கப் பகுதிகளைப் பிடிப்பது தமது நோக்கமல்ல என்று புலிகள் இயக்கத்தினரும் அறிவித்து வருகின்றனர். இரு தரப்பினருமே அவர்களுக்கு மட்டுமே தெரிந்த காரணங்களுக்காக இவ்வாறு தற்பாதுகாப்பு தாக்குதல் என்றும் பதில் தாக்குதல் என்றும் கூறிவருகின்றனர். ஆனால் நடப்பதோ வான் தாக்குதலும், எறிகணைத் தாக்குதல்களுமாகும்.

வான் தாக்குதல்கள் எறிகணைத் தாக்குதல்கள், குண்டுத் தாக்குதல்கள் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. தொடர்ச்சியாக ஊரடங்கு அமுலில் இருக்கிறது. மக்கள் கொல்லப்படுகின்றனர். முல்லைத்தீவில் இயங்கிய செஞ்சோலை என்ற புலிகளின் சிறுவர் இல்லத்தின் மீது அரசாங்க விமானப் படைகள் தாக்குதல் நடத்தியதால் 61 மாணவ மாணவியர்களும் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.


அப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவி சிகிச்சைக்கான வகுப்புகள் நடந்து கொண்டிருக்கும் போதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பிரான்சு நாட்டைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் 17 செயற்பாட்டாளர்கள் மூதூரில் அவர்களது காரியாலயத்தில் இருக்கும் போது கொல்லப்பட்டு ள்ளனர். பெரும் எண்ணிக் கையான மக்கள் இடம்பெயர் கின்றனர். உண்ண உணவின்றியும் பருக நீரின்றியும் மக்கள் பரிதவிக் கின்றனர். இவையாவும் பதில் தாக்குதல்களினதும் விளைவென்றால் இரு தரப்பினரின் அர்த்தத்தின்படி யுத்தம் நடைபெற்றால் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாதிருக்கிறது.

தாக்குதல்கள் நடத்துவதில்லை என்றும் பேச்சுவார்த்தைக்கு வருவதாகவும் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் இலங்கை அரசாங்கம் தாக்குதல்களை நிறுத்தும் என்று ஜனாதிபதி மஹிந்த நோர்வேயிடம் கூறியிருந்தார்.

இதனை அறிவித்துவிட்டு அவர் பிரிட்டனுக்குச் சென்றார். அது அவரின் தனிப்பட்ட விஜயம் என்று தெரிவிக்கப்பட்ட போதும் அவர் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளையரைச் சந்தித்துள்ளார். இந்திய அரசாங்கத்தின் ஆதரவை இலங்கை அரசாங்கத்திற்கு பெற்றுத்தர வேண்டுமென பிரிட்டன் பிரதமரை மஹிந்த கேட்டுக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக கின்றன.

இலங்கைக்கு திரும்பிய பிறகு செப்டெம்பர் 04ம் திகதி நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றும் போது கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூரை அரச படைகள் கைப்பற்றிவிட்டதாக ஜனாதிபதி மஹிந்த மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அரசாங்கம் புலி பயங்கரவாதத்திற்கு அடிபணிந்து போகாது என்பது சம்பூரை கைப்பற்றி யமை எடுத்துக்கா ட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.



சம்பூரை அரச படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவித்த பிறகும் அப்பகுதிகளிலும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் அரச படைகள் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதற்கிடையில் செப்டெம்பர் 12 ஆம் திகதி இலங்கையின் சமாதான நடவடிக்கைகளின் இணைத்தலைமை நாடுகள் இலங்கையின் தற் போதைய நிலைமை பற்றி ஆராய்வதற்காக பிறசல்ஸ் நகரில் கூட விருக்கின்றன. இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து போரை நிறுத்த வேண்டும் பேச்சுவார்தையை ஆரம்பிக்க வேண்டும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுவரும் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்று கேட்டதாக செய்திகள் வெளியாகின.

கடந்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்காவின் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதான பிரதி ஆணையாளர் ஸரீவ் மான் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவலங்களை போக்குவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் அர்ப்பணிப்பு மிக்க வேலைகளை சம்மந்தப்பட்ட தரப்பினர் மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

பிரான்ஸில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் 17 செயற்பாட்டாளர்கள் கொல்ல ப்பட்டமை பற்றியும், செஞ்சோலை யில் 61 பேர் கொல்லப்பட்டமை பற்றியும் இணைத் தலைமை நாடு கள் அவற்றின் விசனத்தை ஜனாதிப தியிடம் தெரிவித்ததாக அறிய முடி ந்தது.

வடக்கு கிழக்கில் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்க நிவாரணங்கள் தமிழ் மக்களை சென்றடையாததுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் தடுக்கப்படுகின்றன. தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் வங்கிக் கணக்குகள் மத்திய வங்கி ஆலோசனையின்படி நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் முடக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் செய்யப்பட்டு வந்த மனிதாபிமான நடிவடிக்கைகளும் தடுக்கப்பட்டுள்ளன. சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான கட்டமைப்பு நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒத்துக் கொண்ட சுனாமி கட்டமைப்பு உயர் நீதிமன்ற கட்டளையினால் முடக்கப்பட்டது என்பது தெரிந்ததே.

பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணங்களும், மனிதாபிமான உதவிகளும் சென்றடையாது தடுக்கப்பட்டுள்ளன. நீடித்த ஊரடங்கினாலும் பணமில்லாததினாலும் பொருட்கள் இல்லாததினாலும் பொருட்களை கொள்வனவு செய்ய முடியவில்லை மக்கள் மீது மீண்டும் யுத்தம் திணிக் கப்பட்டது போன்று பசியும் பட்டினியும் திணிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை மூதூரிலிருந்து இடம் பெயர்ந்த மக்களும் அரசாங் நிவாரணங்களை எதிர்பார்த் துக் கொண்டே காலத் தை ஓட்டு கின்றனர்.

இந் நிலையில் எதிர்வரும் 12ஆம் திகதி கூடவுள்ள இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் கண்டிப்பதாகவும் இரு தரப்பையும் யுத்தத்தை கைவிட்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென கோருவதாகவும் அறிக்கையொன்றை விடலாம். இதுவே அக் கூட்டத் தீர்மானமாக கொள்ளலாம்.

யுத்தத்தை நிறுத்தும்படி கோரி கடந்த மாதம் 17ஆம் திகதி கொழும்பில் யுத்த எதிர்ப்பு முன்னணி ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்தியது. அக் கூட்டத்தை குழப்பும் முயற்சியில் பேரினவாதிகள் ஈடுபட்டனர் அவர்கள் தாக்கப் பட்டதுடன் அவர்களின் கூட்டத்தை குழப்பும் முயற்சி முறியடிக்கப்பட்டது. எதிர்வரும் 21ஆம் திகதி யுத்தத்தை எதிர்த்து பாரிய பேரணி ஒன்றை நடத்தவுள்ளதாகவும் யுத்த எதிர்ப்பு முன்னணியின் தலைவர் குமார் ரூபசிங்ஹ அறிவித்துள்ளார். இது ஒரு என்.ஜி.ஓ நடவடிக்கை என்றாலும் அதனைக் குழப்பும் அளவிற்கு பேரினவாதிகள் நடவடிக்கைகள் மேலோங்கியுள்ளன.

இவ்வேளை தமிழ் நாட்டில் மக்கள் மத்தியிலும் அமைப்புக்கள் மத்தியிலும் மீண்டும் இலங்கைத் தமிழ் மக்கள் மீதான அக்கறையும் அனுதாபமும் வேகமாக வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதனால் இலங்கை விவகாரத்தில் தலையிட்டு யுத்தத்தை நிறுத்த இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தமிழ் நாட்டிலிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்திய அதிகாரப் பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான இந்திய அரசாங்கத்தின் ''சர்க்காரியா யோசனைகள்'' இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைப்பதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் கொள்ளுப்பிட்டியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு பதவி விலகிச் செல்லும் பாகிஸ்தானிய துாதுவரான ''பஸீர் வாலி மொகமட்"ஐ இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு இராணுவ ரீதியாக பாகிஸ்தான் அதிகமான உதவிகளை செய்து வருவதால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் இயக்கம் அத் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என அரசாங்கம் கூறியுள்ளது. அதேவேளை முன்னாள் 'றோ' அமைப்பின் தலைவர் பி.இராமன் தற்போது இலங்கையில் வடக்கு கிழக்கில் நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்களை பாகிஸ்தானிய விமானப்படை அதிகாரிகளே வழி நடத்துவதாக குற்றம் சாட்டியுள்ளார். அப் பாகிஸ்தானிய அதிகாரிகள் கொழும்பில் தங்கி இருந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி வருவதாக தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் தூதுவராக பாகிஸ்தான் விமானப்படையின் பிரதி சிரேஷ்ட அதிகாரியாக இருந்த ஏயார் வைஸ் மார்ஷல் ஷிகாட் அஸ்லம் சௌத்தரி நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பிரதி தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவரும் விமானப்படை அதிகாரியாக இருந்தவர் எனக் கூறப்படுகிறது. இந்தியாவில் இடம்பெறும் பலவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பதவி விலகும் பாகிஸ்தானிய தூதுவரும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்களும் காரணம் என்றும் பி.இராமன் குற்றஞ் சாட்டியுள்ளார். பாகிஸ்தானுக்கு மேலாக இந்தியா இலங்கை அரசிற்கு இராணுவ உதவிகளை செய்ய வேண்டுமென்று இராமன் கோரியுள்ளார்.

பாகிஸ்தானிய தூதுவரை இலக்கு வைத்ததாகக் கொள்ளப்படும் தாக்குதலின் பின்னணியில் இந்திய உளவு நிறுவனமான ''றோ'' இருக்கலாம் என்று பாகிஸ்தானிய சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதாக அறிய முடிகிறது. தூதுவர் பஸீர் வாலி மொகமட் அத் தாக்குதலை புலிகள் இயக்கம் செய்யவில்லை இந்திய 'றோ'வே செய்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இன்றைய யுத்த நிலைமை ''இணைத் தலைமை நாடுகளின்" ஆதிக்க களமாகவும், இந்தியாவினுடைய ஆதிக்க்

தொடர்ச்சி 11ம் பக்கம் ➪

**"தொடரும் யுத்த இருளை சபித்துக் கொண்டிராமல் அவ்விருளை அகற்ற சிறிதளவாவது ஒளி ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்" இவ்வாக்கியம் யுத்தப் பாதிப்புக்களிலிருந்து மீளுவதற்கான நம்பிக்கை தரும் வாக்கியமாக கொள்ளப்பட்ட காலங்கள் இருந்தன. யுத்த இருளை அகற்றுவதற்காகவென்று ஒளி ஏற்றபட்டால் அதையும் சாதகமாகக் கொண்டு யுத்தமே மேலும் உக்கிரமாக நடத்தப்படலாம் என்பதே தற்போதைய யதார்த்தம்.**



யாழ் குடா நாட்டிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலை செல்வதற்காக யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தில் காத்திருக்கும் மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மேல்கொத்மலைத் திட்டத்தை தடுத்து நிறுத்த காலம் கடந்து விடவில்லை

எனது வணக்கம். எதைப் பற்றியும் கவலைப்படாமல், எது நடந்தாலும் நமக்கென்ன என்று வாழ்ந்த ஓர் மனிதன்தான் நானும். உங்களோடு சில வார்த்தைகள் பகிர்ந்து கொள்ள ஆவலாய் உள்ளேன்.

நான் தலவாக்கொல்லையில் மேல்கொத்மலை நீர் மின் திட்டத்தால் பாதிக்கப்படப் போகும் தோட்டத்தில் பணி புரியும் ஓர் தொழிலாளி. கடந்த சில வருடங்களாக மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக பல போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றிலெல்லாம் நான் பங்கெடுத்ததில்லை.

போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது எமக்கு எப்படியாகிலும் அறியத் தருவார்கள். அதில் பங்கு கொள்பவர்கள் இளைஞர்களானாலும் நாம் போவதில்லை. நம்மிடையே உலவும் புல்லுருவிகள் இந்தப் போராட்டங்களுக்கு போக வேண்டாம் எனவும், பாரிய பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு எனவும் கூறி எம்மை கிலி கொள்ளச் செய்வார்கள்.

நாங்கள் போராட்டங்களில் பங்கெடுக்காததற்கு அது மட்டும் காரணமன்று, எமக்கு வீடு கிடைக்கும் என்பதாலும், நல்ல ஊதியத்தில் தொழில் கிடைக்கும் என்பதாலும் தான் நாங்கள் அன்று நடந்த அந்த நேர்மையான புரட்சிகரமான போராட்டங்களுக்கு செல்லவில்லை. அந்தக் காலத்தில் இத் திட்டத்தை எதிர்த்தவர்கள் மீது எனக்கு அன்று கோபமாகவும் இருந்தது.

எமக்கு வீடும் கிடைக்கப் போவதில்லை, தொழிலும் கிடைக்கப் போவதில்லை. எம்மை நன்றாக ஏமாற்றி விட்டார்கள். இத் திட்டம் நிச்சயம் ஒரு நாசகாரச் செயலாகும். அதை எதிர்த்தவர்கள் அது பற்றிய உண்மைகளை கூறிய போது நான் செவிமடுக்கவில்லை. அசட்டையாக இருந்து விடடேன். இதன் மூலம் ஏகாதிபத்தியம் தான் நன்மையடையப் போகிறது.

எமது மலையகத் தலைவர்கள் இது பற்றியெல்லாம் கவலை கொள்ள மாட்டார்கள். அவர்கள் இதன் மூலம் எமது பிரதேசம் அபிவிருத்தி அடையப் போவதாக பிதற்றிக் திரிகிறார்கள். இதுவரையில் நமது பிரதேச அபிவிருத்தி பற்றி யோசியாதவர்களுக்கு இப்போது தான் கரிசனை உண்டாகி இருக்கிறது. இவர்களது கவனம் எல்லாம் மணல், கம்பி ஒப்பந்தங்களிலே தான். மாறாக நம் மக்கள் மீதோ வளங்கள் மீதோ அல்ல.

இவர்கள் தான் எமக்கு இனிவரும் காலங்களில் உரிமைகளையும், சம்பள உயர்வுகளையும் பெற்றுத்தரப் போகிறார்களா? இவர்களை நம்பிப் பிரயோசனம் இல்லை. இனி நாம் ஏமாறக் கூடாது. இத் திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும். நாட்டிற்கு மின்சாரம் என்பது அத்தியாவசியம் தான். நாம் இல்லையென்று கூறவில்லை. மாற்றுத் திட்டங்கள் மூலம் இத்திட்டத்தினால் பெறும் மின்சக்தியை விட அதிகமான வலுவுள்ள மின் சக்தியை பெறலாம் என புத்தி ஜீவிகள் கூறியுள்ளனர்.

அதைவிடுத்து எமது அரசியல்வாதிகளோ இந்த நாசகாரச் செயலுக்கு ஒத்தூது கிறார்கள். இந்தப் பாரிய நாசத்தின் மூலம் மின்சாரத்தைப் பெறவே ண்டிய அளவிற்கு நமது தேவைகள் அதிகரித்து விடவில்லை.

இத் திட்டத்தின் மூலம் பெறப்படும் மின் வலுவும் ஜப்பான் இங்கு அமைக்கப் போகும் தொழிற்சாலைக்கே போதாதாம். எம்து நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தராத இத்திட்டத்தை நிறைவேற்ற ஏன் துடிக்கிறார்கள் எனத் தெரியவில்லை.

என்னைப் பொறுத்தளவில் இது ஒரு திட்டமிட்ட பேரினவாத மேலதிகத் திட்டமாகும். எமது செறிவைக் குறைத்து குடியேற்றத் திட்டங்களை புகுத்துவதற்கான நடவடிக்கை எனலாம். இதே போல கீழ் கொத்மலைத் திட்டத்தால் எமது சகோதரர்களுக்கு நடந்ததை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

எமது வளங்களை அழித்து எம்மை அநாதைகளாக ஆக்கும் இத்திட்டத்தை எதிர்க்க வேண்டும். இத்திட்டத்திற்கு எதிரான முற்போக்கு சக்திகளின் கைகளை பலப்படுத்துவது இந்தப் பிரதேச மக்களாகிய எமது கடமையாகும்.

கடைசியாக எமது அரசிடமும், எமது அரசியல் தலைமைகளிடமும் சிலவற்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் கூறியது போல எமக்கு வீடு கொடுப்பீர்கள் என வைத்துக் கொள்வோம். இந்தப் பிரதேசத்துடன் நாம் கொண்டிருந்த பிணைப்பு, மகிழ்ச்சி, நிம்மதி என்பவற்றைத் தர இயலுமா? எமது மூத்தோரதும், சிவனு லெட்சுமணனதும் புதை மேடுகளைத் தர இயலுமா? இவையெல லாம் எமது வரலாறுகள். இவற்றை அழிவுக்கு கொடுத்து விட்டு நாளைய தலைமுறைக்கு எந்த வரலாற்றைக் குறித்துக் காட்டுவது? இது குறித்து எம் மண்ணின் அனைத்து மக்களும் சிந்திக்க வேண்டும். ஒற்றுமையே பலம், போராட்டமே பாதை, வெற்றியே இலக்கு. நாம் தொழிலாளர்கள் யாவரும் ஒன்றுபட வேண்டும் எனக் கேட்டு முடிக்கிறேன்.

எஸ்.இளங்கோவன்
தலவாக்கொல்லை.

# கிட்டு எழுதும் கடிதம்

மதிப்பிற்குரிய மாகாணசபை உறுப்பினருக்கு, முதற் கண் வணக்கங்கள். 26- 07- 2006 அன்று வீரகேசரி பத்திரிகையில் நீங்கள் திருவாய் மலர்ந்த விடயம் ஒன்றை வாசித்ததன் பின்பு தான் உங்களுக்கு இந்தக்கடிதத்தை எழுத என் எண்ணம் தூண்டியது. "மலையகத்தில் இனவாதச் செயல்களால் நிர்கதியாகும் மலையகத் தமிழருக்கு இந்தியா அகதி அந்தஸ்து வழங்கி அடைக்கலம் கொடுக்க வேண்டும்" என குறிப்பிட்டிருந்தீர்கள்.

1948ம் ஆண்டு பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு அனாதையாய் நின்ற மலையகத் தமிழர்களுக்கு இந்தியா என்ன ஆதரவைத் தந்தது? சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையகத் தமிழர்கள் பலவந்தமாக தமது உறவுகளைப் பிரிந்தும் வாழ்விடங்களை விட்டும் அநாதரவாய் இந்தியாவுக்கு அனுப்பிய வரலாறுதான் உள்ளது. ஆசியாவின் பிராந்திய வல்லரசாக மாற இன்று துடித்துக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு அன்று மலையகத்தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குமாறு கூற ஏன் முடியாமல் போனது?

அது மட்டுமன்றி இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்படுகொலை, இனக்கலவரம், யுத்தம் என்பனவற்றுக்கு இந்தியா என்ன உருப்படியான தீர்வுகளை வழங்கியுள்ளது? இந்தியாவின் இரட்டைவேடத்தன்மை பற்றி இலங்கையின் அனைத்து மக்களும் அறிவர். நீங்கள் ஒன்றும் புதிதாக இந்தியாவைப் பற்றி அறிவு புகட்டத் தேவையில்லை.

ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் என வாய் கிழிய கதைத்துக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. இலங்கை போன்று பல்தேசிய இனங்கள் வாழக்கூடிய நாட்டில் அனைத்து தேசிய இனங்களும் ஐக்கியப்பட்டு வாழக்கூடிய சூழலை உருவாக்குவது அனைத்து அரசியல் வாதிகளையும் சார்ந்ததாகும். அவ்வாறில்லாது இனமுரண்பாடுகள் வளரும் போது அம்முரண்பாடுகளை தீர்த்து வைப்பதற்கான முயற்சியும் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் சுய நிர்ணய உரிமையையும், வாழ்வதற்கான பாதுகாப்பும் ஏற்படுத்திக் கொடுப்பது அந்நாட்டின் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

ஐயா, பம்பேகமுவையிலும், திஸ்ஸ மகாராமையிலும் இடம்பெற்றது போல் மலையகத்தமிழர் செறிந்து வாழும் மத்திய மாகாணத்தில் இவ்வாறானதொரு நிகழ்வு இடம் பெறுமாயின் அவர்களையும் இந்தியாவுக்கு அனுப்புவீர்களா? மேல் கொத்மலைத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு காணி வீடு வழங்குவதாக கூறி அரசால் ஏமாற்றப்பட்டு தமது சொந்த நிலங்களில் இருந்து அந்நிய மாக்கப்படும் அந்த 450 குடும்பங்களையும் "இந்தியா அகதிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று நீங்கள் கூறினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இந்தப் பேரினவாத அரசு திட்டமிட்டு ஒரு சிறுபான்மை சமூகத்தின் செறிவை குறைக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் உங்களது கூற்று அதற்கு ஒத்து ஊதுவது போல் உள்ளது (அதைத்தானே இவ்வளவு நாளும் செய்து வருகிறீர்கள்).

ஒரு நாட்டில் நடக்கக்கூடிய இன ஒடுக்குமுறை போன்ற

தொடர்ச்சி 7ம் பக்கம் ➪

# மலையக அரசியல்வாதிகளின் அகராதியில் 'புரட்சி' என்பதன் அர்த்தங்கள்

மலையக அரசியல் மேடைகளில் பொய்களுக்கும், போலித்தனங்களுக்கும் எப்படி பஞ்சமில்லையோ அதே போல் சுவரொட்டிகளுக்கும், அதன் முகங்களில் பொறிக்கப்படும் வசிகர சுலோகங்களிற்கும் குறைவில்லை. தேர்தல் காலங்களிலும் சரி, மேதின மேடைகளிலும் தலைவர்களின் 'முழக்கங்களிலும்' இத்தகைய வார்த்தைகள் அதிகமாக உள்ளடக்கப்பட்டிருக்கும். இவைகளில் ஒன்றுதான் 'புரட்சி' எனும் சொல். (புரட்சி என்னும் சொல்லை மகாகவி பாரதி தமிழுக்கு அறிமுகப்படுத்தினார் என்பது மேலதிக தகவல்) எனினும் புரட்சி என்பது பாரதியின் காலத்தை விட மிகவும் பழையது.

புரட்சி என்பதற்கு முற்றிலும் மாற்றுதல், சுழற்சி, சுற்று எனும் அர்த்தங்கள் உள்ளன. திருமகள் தமிழகராதி புரட்சி என்பதற்கு பிறழ்வு, மாறுதல், ஒழுங்கின்மை போன்ற அர்த்தங்களும் இருப்பதாக சொல்கிறது. ஆனால் திருமகளின் புரட்சிக்கான பொருளை யாரும் ஏற்றுக் கொண்டதாகவோ, பயன்படுத்துவதாகவோ தெரியவில்லை. இது ஒரு புறம் இருக்கட்டும்.

புரட்சி என்பது எல்லாத் துறைகளிலும் நடக்கலாம். மிக அண்மைக் காலங்களில் இத்தகைய புரட்சிகளை கண்முன்னே காணக்கூடியதாகவுள்ளது. கைத்தொழில், விஞ்ஞானம், இலக்கியம், கலை, விளையாட்டு, விவசாயம், சமுகம், அரசியல் என எல்லாத் துறைகளிலும் நிகழ்கிறது. இவற்றில் அரசியலை எடுப்போம். அரசியலிலும் புரட்சி என்பது முற்றிலுமான மாற்றத்தையே குறிக்கலாம். எனினும் உலகின் அரசியல் வரலாறுகளில் புரட்சி எனும் பதம் உழைக்கும் மக்களுக்கான நேர்மையான, சம நீதியான, சமத்துவமிக்க, சொந்தக் காலில் நிற்கக்கூடிய, சமுகத்திற்காக தனிமனிதனும், தனிமனிதனுக்காக சமுகமும் உழைக்கக்கூடிய சமுகத்தை கட்டியெழுப்புவதற்கான மாற்றம் என்பதையே அடையாளப்படுத்தியுள்ளது. சரித்திரங்களில் தம் பெயரை பதிவு செய்து கொண்ட எல்லா புரட்சியாளர்களும் இந்த பண்புகளை உடையவர்களாய் இருந்திருக்கின்றனர்.

இத்தகையோர் சமவுடைமை கொள்கையை வலியுறுத்தியுள்ளனர். இதற்கான மூலக் கோட்பாடுகளை மாக்ஸ், ஏங்கல்ஸ் போன்றவர்கள் உருவாக்கிக் கொடுத்த பின் அவ்வழி நடந்த லெனின், மா-ஓ, ஸ்டாலின், சேகுவேரா, பிடல் காஸ்ரோ போன்றவர்களை உதாரணமாக காட்டலாம். இவர்கள் எத்துணை துன்பம் வந்த போதும் பாட்டாளிகளுக்கான விடுதலைக்காக அத்தனை துன்பங்களையும் தாங்கி மக்களை வழி நடாத்தி வந்துள்ளனர். பொதுவாக இத்தகைய புரட்சியாளர்கள் மாக்ஸிய நெறி நடப்பவர்கள். தமிழகத்தின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவராக இருந்த ஜீவானந்தம் ஒரு நாள் கொழுத்தும் வெய்யிலில் நீண்ட தூரம் நடந்து வந்திருக்கிறார். வியர்வையால் சட்டை நனைந்துள்ளது. அயலூரில் உள்ள நண்பர், "ஏன் இவ்வளவு வெய்யிலில் நடந்து வருகிறீர்கள்? பஸ்ஸில் வந்திருக்கலாமே" என்றார். அதற்கு ஜீவா பணமில்லை என்றாராம். இவ்வாறு உரையாடல் தொடர்கையில் நண்பர் பையில் என்ன? என்று கேட்டாராம். அதற்கு ஜீவா கட்சிப் பணம் இருக்கிறது என்றாராம். இந்த உதாரணம் புரட்சி வழி நடப்பவர்களின் நேர்மையையும், கறை படியா கைகளுடைய தன்மையையும் காட்டுகிறதன்றோ! இவ்வாறு 'புரட்சி' எனும் பதத்தைப் பயன்படுத்துவோர் அதன் பொருளை உணர வேண்டும். இச்சொல் மாக்ஸியர்களுக்கு மட்டுமே உரியதென்று வாதிடவில்லை. இத்தகைய வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அதன்படி ஒழுகுவோர். பலரும் பயன்படுத்தலாம்.

இவற்றை மலையகத்தை ஆளும் அரசியலோடு தொடர்பு படுத்திப் பார்த்தால் புரட்சி எனும் சொல்லை யார் யார் எல்லாம் பயன்படுத்தக் கூடாதோ அவர்கள் தான் பயன்படுத்துகிறார்கள். பயன்படுத்தக் கூடாதவர் என்று நான் சொல்வது 'புரட்சியின்' விரோதிகளை. தம் விடுதலைக்காக, உரிமைகளுக்காக மக்கள் முன்னெடுக்கும் வெகுஜன போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தும், அரசியல் பலத்தால் சிதறடித்தும் இத்தகைய போராட்டங்களை முன்னெடுத்தவர்களை மக்கள் விரோதிகளாகவும் காட்டியவர்கள் எப்படி இச்சொல்லுக்கு உரிமை கொண்டாட முடியும்? புரட்சிகர அரசியலை முன்னெடுப்பவர்கள் பிற்போக்குவாத தலைமைகளால் 'கலகக்காரர்களாக' அடையாளப்படுத்தப்படுவார்கள்.

தம்மை கலகக்காரர்களாக அடையாளப்படுத்திக் கொண்டு அரசியலுக்கு வந்து புரட்சிகரமாக அரசியலைத் தொடங்கி, தொடரும் திராணியற்ற நிலையில் பெரு முதலாளிகளின் தாள்களுக்குள் மூழ்கிப் போகிறார்கள். இவர்களின் இத்தகைய மக்கள் சார்பற்ற அரசியல் அடையாளத்தால் மலையக மக்களின் மானமும், மரியாதையும் 'கொடிகட்டிப்' பறக்கின்றன. மக்கள் மத்தியில் அளித்த வாக்குறுதிகளை நினைத்தாவது தனது கொள்கையோடு ஒரு கலகக்காரனாகவேனும் அரசியல் நடாத்தி ஆளும்' மலையகக் கட்சிகளில் ஒருவருமில்லை. (நிலையான கொள்கையற்றவர் கலகக்காரராக முடியாதுதானே).

அவர்களைச் சொல்லிக் குறையில்லை. என்னதான் எடுத்துச் சொல்லியும் விளங்காத நிலையில் வாழும் மலையகர், தாம் யார்? தமது அடையாளம் என்ன? தமது உரிமையும், வாழ் நிலையும் எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்தறியும் வேளையிலும் ஏனைய சமூகங்களின் வாழ்க்கை முறையோடும், தரத்தோடும் தமது நிலை என்ன என்பதை ஒப்பிட்டுப் பார்த்து உணரும் வேளையிலும் தான் அந்த "பெரும் புரட்சி"யாளர்களை அடையாளங் காண முடியும். அதுவரைக்கும் "அப்பே ரஜ" (எங்கள் அரசு) கோஷங்கள் தொடரவே செய்யும்.

அதுவரை இவர்களின் புரட்சிகரமான அரசியல் மாற்றத்திற்காக சுலோகங்கள் போஸ்ட்டர்களிலும், கட்அவுட்களிலும் பளிச்சிடவே செய்யும்.

இவர்கள் மலையக அரசியலில் முற்று முழுதான மாற்றம் (புரட்சி) வேண்டி எத்தனையாண்டுகள் கடந்துவிட்டன? அடேயப்பா..... புரட்சி என்ற சொல்லே பழையதாகிவிட்டது. மக்கள் நலம் கருதாத தலைமைகள் மக்களுக்காக எதையும் செய்ய முடியாது. மக்கள் சிந்திக்க வேண்டும். இவ்வளவு கால தமது அரசியல் (கட்சி) அங்கத்துவத்தால், செலுத்திய சந்தாப் பணத்தால் தாம்

தொடர்ச்சி 9ம் பக்கம் ➪

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று14 செப்ரெம்பர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 95
எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

# எரிபொருள் - சுகாதாரம் - கல்வி

இந்தியன் ஒயில் கம்பெனி இலங்கைக்கு எண்ணெய் (எரிபொருள்) இறக்குமதி செய்வதற்கான முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டுள்ளது. பொது விலை நிர்ணயத்திலும் அதன் தீர்மானத்தை திணிக்க நிர்பந்தித்து வருகிறது. தற்போது அந்நிறுவனம் விற்பனை செய்யும் பெற்றோல், டீசல் போன்றவற்றுக்கு அதே விலையை குறிக்கிறது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களை விடக் கூடுதலான விலைக்கே விற்கிறது. அத்துடன் தான் விற்கும் விலைக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் விற்க வேண்டுமென நிர்ப்பந்தித்து வருகிறது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பது இலாபத்தில் இயங்கிய அரசாங்க நிறுவனமாகும். மக்களுக்கு குறைந்த விலையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை விற்பதற்கென அரசாங்கம் குறித்த ஒரு தொகையை அவ்வப்போது மானியமாக வழங்கி வந்தது.

படி மானியம் வழங்கப்படும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க வேண்டும் அல்லது கடனுதவிகள் செய்யப்படமாட்டாது என்பது உலக வங்கியின் அச்சுறுத்தலாகும். திருகோணமலை எண்ணெய் சேகரிப்பு குதங்களை வேறு எந்த நாட்டிற்கும் வழங்கக்கூடாது என்று 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா இலங்கையிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்டது. அத்துடன் கொழும்பிலிருக்கும் (சப்புஸ்கந்தை) எண்ணெய் குதங்களை பெற்றுக்கொள்ள முயற்சி செய்து வந்தது. இவ்வேளையில் இந்தியன் ஒயில் கம்பெனி எண்ணெய் நிரப்பும் நிலையங்களை வாங்கிக் கொண்டதுடன் எண்ணெய் இறக்குமதி செய்யும் வர்த்தகத்தையும், விநியோகிக்கும் வர்த்தகத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது.

இதனால் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் செயலிழந்து விட்டது போலவே தெரிகிறது. தொழிற் சங்கப் போராட்டங்களின் காரணமாகவே இ. பெ. கூட்டுத்தாபனம் இன்னும் ஒரு அரச நிறுவனமாக இருந்து வருகிறது.

ஒரு நாட்டில் எரிபொருள் அரச கட்டுப்பாட்டில் இருப்பதே சிறந்தது. காரணம் பொதுமக்களின் எல்லா நடவடிக்கைகளுடனும் அன்றாடப் பாவனைப் பொருட்களின் விலைகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே எரிபொருள் விளங்குகிறது.

அத்துறை வெளிநாட்டுக் கம்பெனியின் கட்டுப்பாட்டில் விடப்படுவது போன்ற முட்டாள் தனத்தை எங்கும் பார்க்க முடியாது. இந்தியாவிலும் கூட அரசக் கட்டுப்பாட்டிலுள்ள பாரத் ஒயில் கம்பெனியே எண்ணெய் வர்த்தகத்தில் கட்டுப்பாட்டை செலுத்துகிறது. இலங்கையின் எண்ணெய் வர்த்தகம் இந்திய ஓயில் கம்பெனியின் கையில் இருக்கிறது. அக்கம்பெனி எண்ணெய் வர்த்தகத்தில் நுழைந்ததற்குப் பிறகு பல தடவைகள் எண்ணெய் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஈராக்கின் எண்ணெய் வர்த்தகத்தை தனியார்மயப்படுத்தும்படி அமெரிக்கா கொடுத்த நிர்ப்பந்தத்தை ஈராக் ஏற்காதபடியாலேயே அமெரிக்கா ஈராக் மீது ஆக்கிரமிப்பை செய்தது. ஈரான் மீதும் அதேவிதமான அணுகுமுறையையே அமெரிக்கா கொண்டுள்ளது. பெயருக்கே அணுவாயுத பரிகரணம் பற்றிப் பேசப்படுகிறது. வெனிசுவலா மீது அமெரிக்காவிற்கு இருக்கும் மோகமும் எண்ணெய்தான். இதுவே அமெரிக்காவின் உலகமயமாதல்.

இலங்கையின் எண்ணெய் வியாபாரமே இந்திய மேலாதிக்கத்திடம் - இந்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை மாட்டிக் கொண்டுள்ளது. அதிலிருந்து விடுபடாவிட்டால் எண்ணெய்யின் விலைப்பிரச்சினையினாலேயே இலங்கை மக்கள் துன்பப்பட வேண்டியதுதான். விடுபடுவதற்கு ஒரே வழி யாரும் மேலாதிக்கம் செலுத்தாத எண்ணெய் வர்த்தகத்தை மீளக்கட்டுவதாகும்.

கொழும்பில் இயங்கும் இந்தியர்களின் அப்பலோ வைத்தியசாலை கம்பெனியின் அதிகமான பங்குகளை இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம் வாங்கிவிட்டதாக இந்தியர்கள் கவலைப்படுகின்றனர். இது இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் இ. கா. கூட்டுத்தாபனம் அதிகமான பங்குகளை வாங்குவதென்பது அப்பலோ வைத்தியசாலையை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்பது அல்லது பகுதியாக அரசுடமையாக்குவதாகும் என்று விமர்சிக்கின்றனர். அப்பலோ வைத்தியசாலையின் அதிகமான பங்குகளை இ. கா. கூ. வாங்குவதை தடுக்க இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் நிருபமா ராவ் இலங்கை அரசாங்கத்தின் மீது இராஜதந்திர முயற்சிகளை - அழுத்தங்களை கொடுத்ததாக தெரிகிறது.

இந்தியாவின் அளவிற்கு சுகாதாரத்துறையில் இலங்கை சாதனைகளை செய்யாவிட்டாலும் இலங்கையின் இலவச சுகாதார சேவையின் பயனை இலங்கை மக்கள் பரவலாகவே அடைந்தனர். தனியார் வைத்தியசாலைகள் அரசாங்க வைத்தியர்களின் தனியார் மருத்துவம் போன்றவற்றாலும் உலகவங்கியின் அச்சுறுத்தல்களாலும் இலவச சுகாதார சேவை திட்டமிட்டே சீர்குலைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தான் ஏற்கனவே இருந்த தனியார் வைத்திய சாலைகளும் ஆதிக்கம் பெற்றதுடன் நவலோக, டெல்மன் போன்றன கொழும்பில் தோன்றின.

இந்திய வைத்தியர்கள் அவ்வைத்தியசாலைகளுக்கு வந்து சென்றனர். இதனூடே இந்தியாவின் அப்பலோ வைத்தியசாலை அதன் வியாபாரத்தை இங்கு விஸ்தரித்தது.

அதன் திட்டத்தை நிறைவேற்ற கடனுதவியை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்தே பெற்றுக்கொண்டுள்ளது. கடனுதவியை பெறுகின்றபோது இ. கா. கூ. தனியார் மயமாக்கப்படும் என்ற நம்பிக்கை இந்திய அப்பலோ கம்பனிக்கு இருந்துள்ளது. ஆனால் இன்னும் இ. கா. கூ தனியார் மயமாக்கப்படவில்லை. அதனால் அது அப்பலோவின் அதிகமான பங்குகளை வாங்குவது இந்திய அப்பலோவிற்கு பிரச்சினை. 51 சதவீதத்திற்கு அதிகமான பங்குகளை பகிரங்க விற்பனைக்கு விட்டுவிட்டு இ. கா. கூ. அவற்றை வாங்கக் கூடாது என்று இந்திய அப்பலோ தடைவிதிக்க முடியாது. இ. கா. கூ. வாங்கிய பங்குகளை மீளக்கொடுக்க வேண்டும் என இந்திய தூதுவர் அழுத்தம் கொடுப்பது 'இந்திய ராஜதந்திரத்தின்' அப்பட்டமான இன்னொரு தலையீடாகும்.

அதேவேளை— இந்திய அப்பலோ நவலோக்க வைத்தியசாலையில் அதிகமான பங்குகளை வாங்கியுள்ளதாகவும் டேடன்ஸ் வைத்தியசாலையின் பங்குகளை இந்திய வைத்தியசாலை கம்பெனிகள் வாங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. தனியார் வைத்தியத்துறையில் இந்திய வைத்தியத்துறையின் மேலாதிக்கம் பெரிதாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. இலங்கையர் தனியார்துறையில் ஆதிக்கம் செலுத்தினால் மட்டும் சாதாரண பொதுமக்களுக்கு வைத்திய சேவை சென்றடையப் போவதில்லை என்றாலும் தாராளமயம், தனியார் மயம், உலகமயம் என்பவற்றினூடாக இந்தியாவோ வேறெந்த நாடோ இலங்கையின் வைத்தியத்துறையில் இலங்கையின் எல்லைகளை அத்துமீறி ஆதிக்கம் செலுத்துவது இலங்கை மக்களின் இறைமைக்கு ஆரோக்கியமானதல்ல.

அதேபோன்று இலங்கையின் இலவசக்கல்வி பாரிய அச்சுறுத்தல்களுக்குள்ளாகியுள்ளது. இலவசக்கல்வியென்றாலும் அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளாலும் நடைமுறைகளாலும் நகரப்பாடசாலைகளின் தரத்தில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் மூலை முடுக்குகளெல்லாம் சர்வதேச பாடசாலைகள் என்ற பேரில் தனியார் பாடசாலைகள் முளைத்துள்ளன. அவற்றில் பெரும்பாலான பாடசாலைகளின் கல்வித்தரம் மிகவும் குறைவானதாகும். அவை எந்த வித மேற்பார்வைக்கும் உட்படுத்தப்படுவதில்லை.

உயர்கல்வி நிறுவனங்கள் கம்பியூட்டர் கல்வி நிறுவனங்கள் என்று ஆயிரக்கணக்கான கல்வி வியாபார நிலையங்கள் இருக்கின்றன. பட்டப்படிப்புகளை தபால் மூலம் நடத்தும் இந்திய பல்கலைக்கழகங்களும் இங்கு கடை விரித்துள்ளன. இவை கல்வியின் தரத்தை தரைமட்டமாக்கும் நடத்தைகளாவதுடன் கல்வியை முற்றாக வியாபாரமயமாக்குவதுமாகும்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற பொதுமக்களுக்கான சேவைத்துறைகளில் மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கிலேயே கொண்டு நடத்தப்பட வேண்டும். 1959 ஆம் ஆண்டு கியூபா சுதந்திரமடைந்ததன் பின் இரண்டு வருடகாலத்தில் கியூபாவின் கல்வியினதும் சுகாதாரத்தினதும் அடிப்படை அம்சங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இன்று எத்தகைய ஒரு சிகிச்சைக்கும் கியூபா பிரஜைகள் வெளிநாட்டிற்கு செல்லத்தேவை இல்லை. அந்தளவிற்கு அவர்களின் சுகாதாரம் தரமாக இருக்கிறது. அடிப்படைக்கல்வி, உயர்கல்வி என்பனவும் தரமாகவே உள்ளன.

இலங்கையின் முதலாளிவர்க்கத்தின் சிங்கள பௌத்த மேலாதிக்கம் இலங்கையை ஆட்டிப்படைப்பதாக செயற்படும்விதம் இலங்கையின் மீதான எல்லா வெளிநாட்டு மேலாதிக்கங்களையும் உதவிக்கு அழைத்துக் கொண்டுள்ளது. அவற்றுடன் அது கைகோர்த்துக்கொள்ளும்.

இலங்கை நாடும் மக்களும் விடுதலை வேண்டி நிற்பதாயின் எல்லா மேலாதிக்கங்களையும் எதிர்த்தே ஆக வேண்டும்.

-ஆசிரியர் குழு-

## தேசியவாதச் சிந்தனைகளும் பெருந் தேசியவாத அகங்காரமும்

**வெகுஜனன்**

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் யுத்தத்தால் அடித்துச் செல்லப்பட்ட ஒரு நாடாக இலங்கை இருந்து வருகிறது. அவ்வப்போது நெருப்பு மழை பெய்து கொள்ளவும் அதில் அகப்படும் மக்கள் கருகி மாண்டுபோகும் அவல நிலை நீடித்து வந்திருக்கிறது. 2002ம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின் ஓரளவிற்கு தணித்திருந்த இந் நெருப்பு மழை இந்த வருட ஆரம்பத்துடன் மீண்டும் தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்களாக வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் உள்ளடங்கிய நிலையிலும் தமிழ் மக்களே ஆகப் பெரும் எண்ணிக்கையில் அவலங்கள் இழப்புகளுக்கு உள்ளாகினர்.

மக்கள் என்ற வகை நிலையில் வடக்கு கிழக்கில் இதுவரை சுமார் ஒரு இலட்சம் வரையானவர்கள் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டில் அகதிகள் என்று அல்லற்படுவோரும் வெளிநாடுகளில் அகதிகள் என்னும் பெயரில் புலம் பெயர்ந்தவர்களாக உள்ளோரும் பத்து லட்சத்திற்கு மேலாக உள்ளனர். தமது கடும் உழைப்பின் மூலமாகச் சேமித்த அல்லது பாதுகாத்து வந்த அடிப்படை வாழ்வாதாரத்திற்கு தேவையான அசையும் அசையாச் சொத்தின் இழப்பின் பெறுமதி பல பத்துக் கோடிகளாகும். இவற்றுடன் கூடவே கல்வி பண்பாடு உள்ளிட்ட சமூக நிலை இழப்புகளும் சீரழிவுகளும் பாரதூரமானவைகளாகும். இவை அனைத்தையும் மறுசீரமைப்பதோ மீளப் பெறுதல் என்பதோ வடக்கு கிழக்கில் நினைக்க முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. கடந்த நான்காண்டு கால குறுகிய சமாதான- யுத்தநிறுத்த சூழலில் தோற்றம் காட்டியவை யாவும் வெறும் கானல் நீராகி இன்று தினம் தினம் கொலைகள் வீழ்ந்து ரத்தம் பீறிட்டுப் பாயும் பூமியாகி வடக்கும் கிழக்கும் ஏனைய பிரதேசங்களும் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் மேற்போக்கு நிலை நின்று பார்க்கும் போது ஆளும் வர்க்க அரசாங்கம், விடுதலைப்புலிகள் இயக்கம். ஏனைய தமிழ் இயக்கங்கள் ஆகியவற்றுக்கிடையிலான ஆயுதத் தாக்குதல்கள் போராட்டங்கள் யுத்தமாகிக் கொண்டன என்றே நோக்கப்படுகின்றது. இத்தகைய நோக்கானது விளைவுகளை மட்டும் காண்பதுடன் நிறுத்திக் கொள்ளும் நிலைப்பாடாகும். இவற்றுக்கு அப்பால் காரணங்களைக் கண்டறிவதுதான் விளைவுகளை முடிவுக்கு கொண்டு வரத் தேவையானதாகும். விளைவுகளையும் காரணங்களையும் சமூக முரண்பாடுகளின் அடிப்படையில் காணாது நாடு எதிர் நோக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் நியாயமான தீர்வுதேட முடியாது. அந்தவகையில் நோக்கும் போதே யுத்தத்திற்கு காரணமான தேசிய இனப்பிரச்சினையின் இனவர்க்க முரண்பாட்டின் அடிப்படைகளை விளக்கிக் கொள்ளவும் உரிய தீர்வுக்கான வழிகளில் சிந்திக்கவும் அதற்கான பாதையில் பயணிக்கவும் முடியும்.

இலங்கையில் தேசியவாத சிந்தனை என்பது கடந்த நூற்றாண்டின் தொடக்கத்திற்குச் சற்று முன்பிருந்தே வேர் கொள்ள ஆரம்பித்து விட்டது. அதன் வளர்ச்சி படிப்படியாகத் தன்னை வெளிப்படுத்தி ஒரு உருவ நிலைக்கு வந்து கொண்டது. ஆனால் அதன் உள்ளார்ந்ததும் வெளிப்படையானதுமான துயர நிலை என்னவென்றால் முழு நாட்டையும் மக்களையும் கொலனித்துவ ஏகாதிபத்தியப் பிடிக்குள் வைத்திருந்த அந்நிய சக்திகளை எதிர்த்த உறுதியான சுதந்திரப் போராட்டத் தேசியமாக வளர்க்கப்படவில்லை என்பதுதான். தேசிய வீரர்கள் என்றும் சுதந்திரத்தின் தந்தை தனயர்கள் என்றும் முன்னோடிகள் என்றும் சிலை வைக்கப்பட்டவர்களில் எவரும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முழுநாட்டின் தேசியத்திற்காக சொல்லளவில் கூடப் போராடாதவர்கள் என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். முழுமையான சுதந்திரம் கோரி சகல இனமொழி மக்களையும் உள்ளடக்கிய தேசிய அபிலாஷைகள் கொண்ட தேசியக் கோரிக்கை என்பது எச்சந்தர்ப்பத்திலும் இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கமாகத் தம்மைத் தயார்படுத்தி வந்தவர்களால் முன்வைக்கப்படவில்லை. அத்தகைய சிங்கள ஆளும் வர்க்க மேட்டுக்குடியினர் பிரித்தானிய கொலனிய ஏகாதிபத்திய சக்திகளுடன் அடிமை விசுவாச உறவு கொண்டே சுதந்திரம் என்பதனைத் தமது கரங்களுக்கான ஆட்சி அதிகாரமாகப் பெற்றுக் கொண்டனர். அதற்கான மன்றாட்ட மனுக்களைக் கொடுத்த போதே பெருந் தேசியவாதம் அதன் உட்கருவாகிக் கொண்டது. அதுவே பெருந் தேசிய அகங்காரமாக தற்போதைய பேரினவாதமாக கடந்த நூற்றாண்டில் வளர்ச்சி கண்டது.

தொடர்ச்சி 9ம் பக்கம் ⇨

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# போர் நிறுத்தத்தின் விளிம்பில் தீவிரமடையும் போர்

கிழக்கில் 1993 முதல் முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இடையே கிளறிவிடப்பட்ட மோதல்களும் 1994ல் கருணா அணியினரது விலகலும் அதன் பின்பான மோதல்களும் வெளிநாட்டுச் சக்திகளது குறுக்கீட்டின் பாரதூரமான விளைவுகள் என்பது போக, அவை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்கள் அனைத்தையும் பலவீனப்படுத்துவதற்கான வசதிகளாகவும் பயன்பட்டன. சுனாமிக்குப் பின்பான காலத்தில் வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களது வாழ்க்கை நிலை மேலும் மேலும் மோசமாகி வந்தது. பலவிதமான பாதிப்புக்குட்பட்ட மக்களின் நிவாரணத்துக்கான அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குக் கூடத் தடைகள் உருவாக்கப்பட்டன. கடந்த சில மாதங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் என்று சொல்லப்பட்ட ஒவ்வொன்றுக்கும் பதிலடியாக அரசாங்கம் நடத்திய குண்டு வீச்சுக்கள் பொது மக்களின் அவலத்தை மேலும் உக்கிரமாக்கி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புதிதாகப் பல ஆயிரக்கணக்கான மக்களை அகதிகளாக மாற்றின. அவர்களுக்குரிய உணவு, குடிநீர் போன்ற புதிய பிரச்சனைகள் உருவாயின. இந்தப் பின்னணியிலேயே மாவிலாறு மதகின் படலையடைப்புப் பிரச்சனை ஏற்பட்டது.

தமிழ் மக்களுக்குள்ள குடிநீர் பிரச்சனையையும் அதைத் தீர்க்கும் தேவையையும் அரசாங்கத்திற்கு உணர்த்தும் நோக்கில் எடுக்கப்பட்ட கடும் நடவடிக்கையொன்றைப் பேசித் தீர்ப்பதற்குக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் அரசாங்கம் வேண்டுமென்றே தவிர்த்து ஆயுத வழியில் தீர்வை எட்ட எடுத்த நடவடிக்கைகள் பாரிய ஆயுத மோதலாக வெடித்தெழுந்துள்ளன. போர் நிறுத்தம் முடிந்து விட்டது என்று இரு தரப்பினரும் அறிவிக்காமல் பாரிய மோதல்களும் நூற்றுக் கணக்கில் போரிடும் தரப்பினரது உயிரிழப்புக்களும் நேர்ந்திருக்கின்றன என்றால் போர் நிறுத்தம் என்பதை வெறும் பம்மாத்தாகவே இரு தரப்பினரும் அடையாளங்கண்டு அதை ஒரு கேலிக் கூத்தாக்கியுள்ளனர். இந்த நிலைமைக்கு வடக்கு-கிழக்கு வருவதற்கான முக்கிய பொறுப்பு தென்னிலங்கையின் சகல பேரினவாதக் கட்சிகளையும் சாரும்.

ஜே.வி.பியினதும் ஹெல உறுமயவினதும் நெருக்குவாரங்கட்குப் பணிந்து போய் சனாதிபதி ராஜபக்ஷ செயற்படுகிறார் என்று அவரது நடத்தைக்குச் சமாதானங் கூற இயலாது. இன்று மோதல்கள் வலுத்ததற்கு அவர் மனமறியப் பங்களித்துள்ளார் என்பதனை மறுப்பது கடினம். அதே வேளை, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பிரச்சனையை மேலும் மோசமாக்குவதை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதற்கு மேலாக யூ.என்.பியோ அதன் தலைவரோ சொல்லத்தக்கதாக எதுவுமே செய்யவில்லை. அரசாங்கத்தின் அணுகுமுறையை விமர்சிக்கிற யூ.என்.பி, அப்பாவித் தமிழர் பாதிக்கப்பட்டது பற்றி எதுவுமே சொல்ல ஆயத்தமாக இல்லை. அது மாவிலாறு நீர் மறிப்பைக் கண்டித்துள்ளதே ஒழிய அதற்குக் காரணமாயிருந்த நிலவரங்கள் பற்றி எதையுமே சொல்லாமல் தவிர்த்துள்ளது.

இந்த மோதல்கள் ஏற்படுத்தியுள்ள பிரச்சனைகளையும் அவற்றின் பின்னணியையும் அண்மைக் காலங்களில் சிங்களப் பேரினவாத ஊடகங்களிலும் அரச ஊடகங்களிலும் உருவாக்கப்பட்டு வருகிற அபிப்பிராயங்களைக் கருத்திற் கொண்டால், கருணா அணியின் பிரிவையும் அரச சார்பான தமிழ்த் துணைப்படைகளது தீவிரமான செயற்பாட்டையும் அடுத்து விடுதலைப் புலிகள் கிழக்கிற் பலவீனமான நிலையில் இருப்பதாகவும் அவர்களை முறியடிக்க இதுவே தகுந்த தருணம் எனவும் மோதலுக்குத் தூண்டுதலாக நிற்கிற சக்திகளும் குறிப்பாக ஆயுதப் படையினரின் ஒரு பகுதியினரேனும் கருதுகின்றனர் என்றே தோன்றுகிறது.

விடுதலைப் புலிகளின் தோல்வியோ அரச படைகளுடன் மோதுவதன் மூலம் அவர்கள் பலவீனப்படுவது தமக்கு இலாபமானது என்று கருதுகிற பலவேறு அரசாங்க சார்புத் தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் மிகக் குறுகிய கால நோக்கிலேயே நிலமைகளை அணுகி வருகின்றனர். தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதையிட்டு இவர்களில் யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல அரசாங்கப் படைகள் தடையாக இருப்பதைக் கூட இவர்களில் எவருமே ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை.

முஸ்லிம் தலைமைகளிடையில் மாவிலாறு பிரச்சனை பற்றிய அக்கறையே இருக்கவில்லை. சில மாதங்கள் முன்பு சம்பூரில் அரசாங்கப் படைகளின் குண்டு வீச்சுக்களினால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போது அதையிட்டுக் கவலையும் கவனமாகக் கையாளப்பட்ட மொழியில் கண்டனமும் தெரிவித்த கிழக்கு முஸ்லிம் தலைவர்கள் மாவிலாறு பிரச்சனையை அரசாங்கம் மோதலாக வளர்த்த நிலையிற் கூட அது பற்றி அக்கறை காட்டவில்லை. அரச படைகளின் முன்னேறலைத் தடுக்கிற நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட மோதலில் பத்தாயிரக்கணக்கான முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்ட பின்னரே முஸ்லிம் தலைவர்கள் வாய்திறந்துள்ளனர். புதிய முஸ்லிம் அகதிகளின் அவலத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதற்குக் கிழக்கு முஸ்லிம் தலைமைகளும் யூஎன்.பி., ஸ்ரீ.ல.சு.க. முஸ்லிம் தலைவர்களும் போட்டி போடுகின்றனர். இதன் போக்கில் தமிழ் மக்களை முஸ்லிம்களது எதிரிகளாகக் காட்டிக் கொழும்பில் தமிழ் முஸ்லிம் மோதலை உருவாக்குகிற முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இன்று நடக்கிற போரில்லாத போர் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க மட்டும் நடக்கிற போர் அல்ல. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டோ முற்றாக அழிக்கப்பட்டோ ஒரு முடிவு காணப்பட்டதும் அது நிற்கப்போவதில்லை. இப் போர், தமிழ்த் தேசிய இன அடையாளத்தையும் பாரம்பரிய பிரதேச அடையாளத்தையும் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தையும் நிரந்தரமாக அழித்தொழிப்பதற்கானது. தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மைச் சமூகமாக, பேரினவாத்தின் தயவில் அண்டிப் பிழைக்கிற தலைமைகளது வழிகாட்டலில் அற்பச் சலுகைகளுடன் திருப்பதியடையும் இரண்டாந்தரப் பிரஜைகளின் சமூகமாகக் குறுக்கப்படும் வரை போரைத் தொடர்வதே பேரினவாத அரசியல் தலைமைகளதும் அரச படைகளில் ஆதிக்கத்திலுள்ளவர்களதும் நோக்கமாகும். அதனாலேயே, இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு எளிதாக வழங்கக் கூடியனவான தொழில் வாய்ப்புக்கள், கல்வி வசதிகள், அடிப்படை உரிமைகள், சட்டத்தின் முன் சமத்துவமும் அதிகாரத் துஷ்பிரயோகத்தினின்று பாதுகாப்பும் போன்றவை சார்ந்த நூற்றுக்கணக்கான பிரச்சனைகள் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றன. உரிமையாகப் பெறவேண்டிய ஒவ்வொன்றும் சலுகையாக இருக்க வேண்டியுள்ளது. சலுகைகளைப் பெற்றுத் தருகிற தரகர்களாக அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டுகிற முகவர்கள் செயற்படுகிறார்கள். அந்த அதிகாரம் அவர்கட்கு இன்று முக்கியமானது. நாளை விடுதலைப் புலிகள் முறியடிக்கப்பட்டால் அவர்களது முக்கியத்துவமும் இல்லாமற் போய்விடும். இது அவர்கள் அறியாததல்ல. ஆயினும் விடுதலைப் புலிகளுடனான அவர்களது பகைமை நீண்ட கால நோக்கில் நிலவரங்களைக் காண முடியாமல் மறிக்கிறது.

விடுதலைப் புலிகள் தரப்பிலும் ஆயுதப் போராட்டம் முக்கியப்பட்டுள்ள அளவுக்கு மக்களிடையிலான அரசியல் முக்கியப்படவில்லை. தமிழ் இளைஞர் இயக்கங்களின் காலத்திலிருந்து தொடங்கிய இயக்க மோதல்களும் சகோதரப் படுகொலைகளும் என்ற வழமையினின்று விலக முடியாத விதமாகப் பலவேறு வெளியார் நலன்கள் அன்றிலிருந்து இன்று வரை குறுக்கிட்டவாறே உள்ளன. விடுதலைப்புலிகளே தமிழரின் ஏகப் பிரதிநிதிகளா என்கிற கேள்வியை மையப்படுத்தியே அரசாங்கம் விடுதலைப் புலிகளை அரசியலில் இலக்கு வைக்கிறது. கருணா அணிக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் இத் தன்மையினது. ஏகப் பிரதிநிதிகள் என்பதை எப்படி விளங்கிக் கொள்வது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் அதிகம் உள்ளன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டப் படை என்பதும் தமிழ் தேசிய அரசியலின் அதி முக்கிய சக்தி என்பதும் அமைதி பற்றியும் இடைக்காலத் தீர்வு பற்றியும் நீண்டகாலத் தீர்வின் அடிப்படைகள் பற்றியும் அரசாங்கம் தமிழர் தரப்புடன் பேசுவதென்றால் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச இயலும் என்பதும் நடைமுறை அரசியல் யதார்த்தம். ஆனால் விடுதலைப் புலிகளது நிலைப்பாட்டிற்குப் புறம்பான நிலைப்பாடுகள் இல்லை என்பது தமிழ்த் தேசியவாத அரசியலின் உள்ளே கூடப் பொருந்தி வராது. எனினும் மாற்று அரசியலும் கருத்து வேறுபாடுகளும் தளையின்றிச் செயற்படக் கூடிய ஒரு சூழல் இன்று இல்லை. அது இல்லாமைக்கு விடுதலைப் புலிகள் மட்டுமே குறை கூற முடியாது. சனநாயக மறுப்பு என்பது ஒவ்வொரு போராளி இயக்கத்தினுள்ளும் வெளியிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததை யாரும் மறக்கலாகாது. சனநாயக நீரோட்டத்திற் கலந்ததாகச் சொல்லப்பட்ட அமைப்புக்களும் முற்றிலும் சனநாயகமான வழி முறைகளைப் பேணியதற்கு 1987 முதல் இன்று வரை ஆதாரமில்லை. அரசாங்கங்கட்கும் தமிழ் சனநாயகம் பற்றிய அக்கறை இருந்ததில்லை.

ஒரு விடுதலைப் போராட்டம் பரந்து பட்ட மக்கள் போராட்டமாக விரிவடையும் போது அது மக்களின் தேவைளையும் கருத்துக்களையும் சரிவரக் கணிப்பிற் கொள்கிறது. விடுதலை இயக்கம் எடுக்கிற முடிவுகள் மட்டுமில்லாமல், போராட்டம் தொடர்பாக மக்கள் கையாளும் வழி முறைகளும் மக்களின் பாதுகாப்பையும் தேவையற்ற உயிர் உடைமைச் சேதங்களையும் குறைப்பதுடன் அடக்குமுறையாளனான எதிரியை அம்பலப்படுத்தவும் உதவுகின்றன.

மாவிலாறு அணைத் தடுப்பும் திறப்பும் பற்றிய பிரச்சனை ஏற்படுத்திய வீணான உயிர் இழப்புக்கட்கும் பாரிய இடப் பெயர்வுக்கும் பொருளாதாரச் சிதைவிற்கும் வீண் துன்பங்கட்கும் மூல காரணம் அரசாங்கம் கையாண்ட வன்முறையே என்பது உண்மை. அதன் நோக்கம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு அன்றாட நெருக்குவாரங்களை பெருக்கி, முடியுமானாற் பலரையும் அகதி நிலைக்குத் தள்ளி விடுதலைப் புலிகளின் அரசியல் செல்வாக்கை குறைக்கும் அதேவேளை, பாதுகாப்பிற்காக விடுதலைப் புலிகளின் பகுதிக்குச் சென்றோரையும் ஏற்கனவே இருந்தோரையும் மீளவும் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகட்குள் அகதிகளாகக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் பேரழிவுத் தாக்குதலுக்கு உட்படுத்துவதாயிருக்கிற வாய்ப்பு அதிகம். தென்லெபனானில் இஸ்ரேல் இப்போது ஹிஷ்புல்லாவை முறியடிக்கக் கையாளும் உபாயமும் இது போன்ற ஒன்றே.

தமிழ்-முஸ்லிம் மக்கள் பெருமளவிற் சாவதோ பாதிக்கப்படுவதோ பற்றி இலங்கை அரசாங்கத்திற்கு உள்ள ஒரே சிறு அக்கறை, ‘உலக அபிப்பிராயம்’ பற்றியது மட்டுமே. இஸ்ரேலுக்கு அக்கவலையும் இல்லை. இறந்தோர் சிங்கள மக்களாயிருந்தாலும் எந்தச் சாவும் தனது பிரச்சாரத்திற்காகப் பயன்படுகிற அளவுக்கு அரசாங்கத்திற்கு மகிழ்ச்சியே. தென்னிலங்கையில் போருக்கு எதிரான ஒரு வலுவான இயக்கம் எழாமல் தடுத்து அணைத்து அவலங்கட்கும் விடுதலைப் புலிகள் மீது பழியைப் போடுவதும் தனது இழப்புக்களைக் குறைத்தும் விடுதலைப் புலிகளின் இழப்புக்களைக் கூட்டியும் காட்டுவது தேவைப்படுகிறது. ஏனெனில் தமிழ் மக்கள் பலரும் நம்பத் தூண்டப்படுவது போலில்லாது, இலங்கை அரசாங்கம் எதுவும் சாதாரணச் சிங்கள மக்களின் நன்மைக்காக இயங்குகிறதில்லை. படையினரின் சாவுகளும் பெரும்பாலும் புள்ளி விவரங்களே. அவை அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தாதளவில் அவை கவலைக்குரிய விடயங்களல்ல.

விடுதலைப் புலிகளின் தரப்பிலும் அவர்களை ஆதரித்து எழுதுகிற பலரின் நோக்கிலும் போரின் வெற்றி தோல்விகட்கு வழங்கப்படுகிற முக்கியத்துவம் மிகுதியாகவே உள்ளது. மக்களின் நலனும் பாதுகாப்பும் எவ்வாறு ஒரு போராட்டச் சூழலின் போது உறுதிப்படுத்தப்படலாம் என்பது போக தமிழ்த் தேசிய பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதிலும் விடுதலைப் புலிகள் 1990களில் காட்டிய அக்கறை இன்று மீட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டியது. திருகோண மலையிலிருந்து தமிழ் மக்களை வெளியேற வேண்டாம் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை அவர்களின் வெளியேற்றத்தைத் தடுக்கப் போதுமானதாயில்லை. ஏனெனில் பாதுகாப்பாயிருக்கக் கூடிய நம்பகமான ஒரு மாற்றுவழி மக்களின் முன்னாலில்லை. மக்கள் போதியளவுக்கு அரசியல் வழிப்படுத்தப்படாதவரை, அவர்களால் அத்தகைய மாற்று வழிகளை உருவாக்க இயலாது. அவ்வாறான வழியை விடுதலைப் புலிகள் தனியே உருவாக்கித் தர இயலும் என்று எதிர்பார்ப்பதும் தவறு.

மூதூர் முஸ்லிம்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குக் காரணமாக அரசாங்கம் இப்போது அவர்களை நீண்டகால அகதிகளாக்கி ஊருக்கு மீள இயலாத ஒரு நிலைமையை உண்டாக்கியுள்ளது. அதேவேளை விடுதலைப் புலிகளாலேயே முழுப் பிரச்சனையும் ஏற்பட்டது என்று அது பிரசாரம் செய்கிறது, கொழும்பில் கூட தமிழ் முஸ்லிம் பகையைத் தூண்டி விடுகிற விதமான முயற்சிகளில் அரசாங்கச் சார்பு முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொண்டுள்ளனர். மாவிலாறு பிரசச்சனை மோதலாக உருவெடுத்த போது அது அயலிலிருந்த முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளைப் பாதிக்காது என்று கிழக்கின் முஸ்லிம் தலைவர்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்களா? அல்லது இது தமிழ் சிங்கள மோதல் எனவே தாங்கள் தலையிட வேண்டியதில்லை என்று நினைத்தார்களா? அரசாங்கம் தனது படைகளை மூதூர் வழியாகக் கொண்டு செல்ல முயலும் என்பது யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடியதென்றால் விடுதலைப் புலிகள் அதற்கு மாற்று நடவடிக்கை எடுக்காமல் இருப்பார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்க இயலாதா? மூதூரில் இருந்து மக்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலை விடுதலைப் புலிகளை வெளியேற்ற அரச படைகள் எடுத்த கடும் முயற்சிகளின் விளைவானதே ஒழிய விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை விரட்டியதால் அல்ல. எனவேதான் இனச் சுத்திகரிப்பு என்ற பிரசாரம் பொய்யானது. முஸ்லிம் தலைமைகள் குறிப்பாக ஹக்கீம், தனது பதவி ஆசைக்கு நிரந்தரத் தீங்கின்றியும் சில உண்மைகளை மறைக்க இயலாமலும் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பழி சொல்லியிருக்கிறார். முப்பதாயிரம் முஸ்லிம்கள் கந்தளாயிலிருந்து வீடு திரும்ப இயலாது தவிக்கிறதற்கு முடிவு கட்டுவதானால், மாவிலாறு பற்றிய சண்டை முடிவுக்கு வர வேண்டும். அதை வற்புறுத்தாமல் யாரால் முஸ்லிம்கட்குப் பாதிப்பு அதிகம் என்று தீர்ப்புக் கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

முஸ்லிம் - தமிழ் மக்கள் ஒற்றுமையாகவும் அப்பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களுடன் வீண் பகையின்றியும் நீண்ட காலமாக வாழ்ந்திருக்கின்றனர். அதைக் குழப்புவதற்குப் பங்களித்துக் கொண்டே மக்களின் அவலம் பற்றி முதலைக் கண்ணீர் வடிப்பதிற் பயனில்லை.

முழுமையான போர் நிறுத்தம் இல்லாமல் பிரகடனஞ் செய்யப்படாத போர் இதுவரை பிரகடனஞ் செய்யப்பட்ட சில போர்களிலும் மோசமாக நடக்கலாம் என்பதைக் கண்டுள்ளோம். அரசாங்கத்தின் முயற்சியால் போர் நிறுத்தத்தை மீட்டெடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் நழுவிக் கொண்டே போகின்றன. தாக்குதல்கள் மூலம் விடுதலைப் புலிகளை அழிப்பது அல்லது கடுமையாகப் பலவீனப்படுத்துவது என்ற அணுகுமுறை அரச தரப்பிலும் படையினரதும் துணைப்படையினரதும் தரப்பிலும் உள்ளவரை, அமைதிக்கான முயற்சிகள் பாராளுமன்ற அரசியலுக்கு வெளியிலிருந்து தான் முனைப்புப் பெற இயலும்.

தமிழ் மக்களே போரினால் அதிகம் தீமை பெற்றுள்ளனர். அவர்களுக்கு நிலையான நியாயமான தீர்வுடன் இணைந்த அமைதி தேவை. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு அனுதாபமான சக்திகளை வளர்த்தெடுக்கவும் ஊக்குவிக்கவும் வேண்டிய அரசியல் தேவையைக் கூடிய கவனத்தில் எடுக்க வேண்டும். மக்கள் நடுவே சரியான அரசியல் சிந்தனைகள் அரசியல் விவாதங்கள் மூலமும் கலந்துரையாடல்கள் மூலமும் விருத்தி பெறும் போது விடுதலைப் போராட்டம் மட்டுமன்றி மக்களின் பாதுகாப்பும் வலுப்படும் என்பதை நாம் மறக்கலாகாது.

**மோகன் -**

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 4

பேராசிரியர் சி.சிவசேகரம்

## உணவுப் பழக்கவழக்கமும் பண்பாடும்

உணவுப் பழக்கங்கள் பண்பாட்டின் ஒரு முக்கியமான பகுதியாகின்றன. எதை உண்கிறோம் உணவை எப்படித் தயாரிக்கிறோம் எப்படி பரிமாறுகிறோம் எப்படி உண்கிறோம் என்பனவெல்லாம் நமது வாழ்க்கை முறையில் ஏற்படுகிற மாற்றங்களையொட்டி மாறுகின்றன. இவ்வாறான மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுவது எளிதல்ல என்பதை நம்மிற் பலர் அனுபவத்தில் அறிவோம். இந்த மாற்றங்களில் எந்த ஒன்றையுமோ எல்லாவற்றையுமோ சில நிர்ப்பந்தங்களின் கீழ் நாம் ஏற்றுக் கொண்டாலும் இயல்பு வாழ்க்கைக்கு மீளும் போது நமது வழமையான உணவுப் பழக்கங்கட்கு மீளுகிறோம். அதே வேளை, நீண்ட கால இடப்பெயர்வு நம்மைச் சில மாற்றங்கட்குப் பழக்கப்படுத்தி விடுகிறது. எனினும் நமது பழைய உணவு வகைகட்காக ஏங்குவது மட்டுமல்லாமல் உண்ணுகிற முறைகட்காகவும் நாம் ஏங்குகிறோம். இதில் ஒரு பகுதி நமக்குப் பழக்கப்பட்டுப் போன சுவை தொடர்பானது. இன்னொரு பகுதி நமது பண்பாட்டு அடையாளம் பற்றிய உணர்வுகள் தொடர்பானது.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுள் உணவுப் பழக்கங்கள் ஒரே விதமாக இருப்பதில்லை. அச் சமூகத்தினுள் உள்ள பிரதேச, சாதி, மத, வர்க்க வேறுபாடுகள் ஆகியன நமது உணவுப் பழக்கங்களிலும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளுகின்றன. நாம் எதை உண்கிறோம் என்பது நமது சூழலில் எவ் வகையான உணவு வகைகள் கிடைக்கின்றன என்பதிலும் அதில் எவற்றைப் பெறுவதற்கு நமக்குப் பொருள் வசதி உள்ளது என்பதிலும் எவற்றை உண்ணலாம் எவற்றை உண்ணலாகாது என்பது பற்றிய கட்டுப்பாடுகளிலும் தங்கியுள்ளது. இதற்கான பல வேறு உதாரணங்களை ஒவ்வாரு சமூகச் சூழலிலும் யார் எதை உண்கிறார்கள் என்பதைச் சிறிது கவனித்தால் விளங்கும்.

எனினும் இந்திய உணவு, தென்னிந்திய உணவு, தமிழ்நாட்டு உணவு, மரக்கறி உணவு, செட்டிநாட்டு உணவு என்று பலவாறாக அடையாளங்களைக் கொண்ட உணவகங்களைப் பார்க்கிறோம். செட்டி நாட்டார் சைவர்களோ, தமிழரோ, தென்னிந்தியரோ, இந்தியரோ அல்ல என்று இந்த வேறுபடுத்தல் கூறவில்லை. மாறாகப் பொதுமைப்படுத்தப்பட்ட பண்பாட்டு அடையாளங்களையே ஒவ்வொன்றுங் கூறுகின்றன. ஒரு இந்திய உணவகத்திலோ தென்னிந்திய உணவகத்திலோ தமிழ் நாட்டு உணவகத்திலோ ஒரு தமிழர் விரும்பி உண்ணத்தக்க எதுவுமே இல்லாதிருக்கலாம். மரக்கறி உணவுக்கும் சைவ மதத்துக்கும் இறுக்கமான உறவு இருப்பதால் பல சைவர்கள் ஏன் மாமிச உணவையே விரும்புகின்றனர் என்று விளக்க இயலாதிருக்கும். செட்டி நாட்டு உணவு ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஓரளவு வசதி படைத்தோரின் அன்றாட உணவாகவும் சிறப்பான நாட்களில் மட்டுமே பலர் உண்ணுகிற உணவாயும் இருக்கலாம்.

விவசாயிகளும் மீனவர்களும் உட்பட எந்தவொரு சமூகப் பிரிவும் இன்று தனக்கு வேண்டிய எல்லா உணவு வகைகளையும் உற்பத்தி செய்வதில்லை. ஒரு பழங்குடிச் சமூகத்தில் அவ்வாறான உற்பத்தி இயலுமாயிருக்கலாம். எனினும் சமூகங்களிடையே உறவாடல் ஏற்படும் போது புதிய உணவு வகைகள் பற்றிய பரிச்சயம் ஏற்படுகிறது. சமூகங்களிடையே பரிமாறப்படுகிற பொருட்களில் உணவு வகைகள் முக்கியமானவையாகின்றன. சமூக விருத்தியுடன் கூடிய வேலைப் பங்கீடு உணவு உற்பத்தியையும் உள்ளடக்குகிறது.

நிலவுடைமைச் சமூக அமைப்புக்களில், குறிப்பாகக் கிராமங்களில் சமூக உறவு விதிகள் இறுக்கமாகப் பேணப்படுகின்றன. அதன் விளைவாக கிராமங் கட்கிடையிலான உறவுகளும் வரையறை கட்குட்படுகின்றன. பல வேறு பிரதேச அடையாளங்களுள் உணவுக்கு ஒரு முக்கியமான பங்குண்டு. வெளியிலிருந்து வந்த உணவுப் பொருட்களும் உணவு தயாரிக்கும் முறைகளும் உள்வாங்கப்பட்டாலும் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு சமூகப் பிரிவுக்கும் உரியனவான சில அடையாளங்களுடன் ஒட்டியே அவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கும் மேலாக ஊர் வழக்கங்கள் மத நம்பிக்கைகள் என்பன உட்பட பல வேறு கட்டுப்பாடுகளும் உணவுக்குரிய பொருட்களையும் அவற்றை உணவாக்கும் முறைகளையும் தீர்மானிக்கின்றன. அதற்கும் மேலாக உணவை யார் சமைப்பது எப்படிப் பரிமாறுவது எந்த வரிசைக் கிரமத்தில் ஒவ்வொன்றும் உண்ணப்படலாம், எவரெவர் ஒன்றாயிருந்து உண்ணலாம், யார் முதலில் உண்பது என்றவாறு பலவாறான விதிகள் உருவாகின்றன. விருந்து வைபவங்களிலும் வீட்டில் உண்ணுகிற போதும் இவ் விதிகள் ஓரளவு இறுக்கமாகவே கடைப்பிடிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டவாறான கட்டுப்பாடுகளை அவதானித்தால் உணவுப் பழக்கங்கள் என்பன ஆணாதிக்கச் சாதிய அடையாளங்களைத் தம்மோடு இணைத்துக் கொண்டிருப்பதை நாம் காணலாம். முதலாளியின் வருகையும் நகரங்களின் விருத்தியும் கிராம வாழ்வில் முதலாளியத்தினதும் நகர வாழ்வினதும் தாக்கங்களும் நிலவுடைமைச் சமுதாயங்களின் சில செயற்பாடுகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. எனினும் அது அடிப்படையான ஒரு மாற்றமாகி விடுவதில்லை. ஏனெனில் நீண்ட காலமாக நிலைத்திருந்த ஒடுக்கு முறை சார்ந்த சிந்தனைகள் சமுதாய அமைப்பு நிலவுடைமையிலிருந்து முதலாளியத்திற்கோ, புதிய சனநாயகம், மக்கள் சனநாயகம் என்பன போன்ற சோசலிஷ நோக்குடைய அமைப்புக்கட்கோ பெயர்வதால் மட்டுமே இல்லாமற் போவதில்லை. உற்பத்தி உறவுகளிலும் பொதுவான வெளிவெளியான சமூக ஊடாட்டங்களிலும் காட்டப்படாத ஏற்றத் தாழ்வுகள் குடும்பத்தினுள்ளும் தனிப்பட்ட உறவுகளிலும் தனிமனித நடத்தையிலும் வேண்டுமென்றோ தம்மையறியாமலேயே மனிதராற் பேணப்படுகின்றன. இவற்றிலிருந்து விடுபடத் தொடர்ச்சியான உணர்வு பூர்வமான செயற்பாடுகளும் பல வேறு போராட்டங்களும் தேவை. உதாரணமாக வாழையிலையிற் சாப்பிடுவதை எடுத்துக் கொண்டால் அது பழைய சமுதாயத்தில் உணவைப் பரிமாறுவதற்கான ஒரு தட்டம் போலப் பயன்பட்டது. மிகவும் வசதி குறைந்தோர் இலையிற் சாப்பிட்டனர். எனினும் அது சமுதாயத்தில் பரவலாகப் பயன்பட்டது. வீட்டில் வெள்ளி, பித்தளைத் தட்டுக்களில் உண்கிறவர்களும் பொது இடங்களில் வாழை இலைகளில் உணவை உண்டனர். விருந்தினருக்கு வாழை இலைகளில் உணவு பரிமாறினர். வாழை இலை சுகாதாரமானது என்ற கருத்து நம்முள் இருந்தாலும் அது தீட்டு, துடக்கு என்கிற விதமான சாதிய அடிப்படையிலான தூய்மை பேணுவதற்கும் ஒரு வசதியாகிறது. நகர வாழ்க்கை அதிற் சில பாதிப்புக்களை உண்டாக்கினாலும் உணவு விடுதிகளில் எவர்சில்வர் தட்டுக்களில் வாழையிலை வைத்துப் பரிமாறுகிறது பல இடங்களில் வழமையாகியுள்ளது.

வாழையிலையில் உண்ண விரும்புகிற எல்லாரும் சாதியத் தூய்மையோ சுகாதாரம் பற்றிய சிந்தனையோ காரணமாக அதை விரும்புவதில்லை. தமது மரபுடனான தொடர்பானதாகப் பலர் அதை காணுகின்றனர். சில இடங்களில் தலை வாழையிலை வடிவிலமைந்த உலோகத் தட்டுக்களிலும் உணவு பரிமாறப்படுகிறது. வாழையிலை தோற்றப்பாடான சமத்துவத்தின் வழியே சமத்துவமின்மையைப் பேணுவதற்கு அன்று போல இன்றும் ஓரளவுக்குப் பயன்பட்டாலும் நகரில் அதன் முக்கியத்துவம் சடங்குத் தன்மையானது. பந்தியில் பரிமாறுகிற போது யாருக்குத் தலை வாழையிலையிற் பரிமாறுவது என்பன போன்ற அதிகார அடுக்குத் தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் தொடர்கின்றன. எனினும், இங்கேயும் மரபுடனான பரிச்சயம் இழக்கப்பட்டுப் போகிற நகரச் சூழலில் தரையில் பாய் விரித்துப் பந்தியிற் பரிமாறுவதற்கு மாறாக தாமே பரிமாறி மேசையிலோ அல்லது இடது கையிலோ தட்டை வைத்து உண்ணுகிற வழக்கம் நிலைபெற்று வருகிறது.

சமுதாய வழக்குடன் காரண காரியத் தொடர்புடைய மரபுகள் சடங்காக மாறிச் சிறப்பான சமூக நிகழ்வுகளில் மட்டுமே மரபை அடையாளப்படுத்துகிற விதமான தலைவாழையிலை வடிவ எவர்சில்வர் தட்டுப் போன்ற ஒரு குறியீடாகவோ மரபின் ஒரு பகுதியாகவோ கடைப்பிடிக்கப்படுகின்றதை நம் கண்முன்னே காணுகிறோம். விருந்து வைவங்களிற் பரிமாறப்படும் உணவு வகைகள் சில மரபின் அடையாளமாகத் தொடர்ந்தும் சில உணவு வகைகளைத் தயாரிப்பதிலும் பெறுவதிலும் உள்ள இடர்பாடுகள் மாற்று உணவு வகைகட்கு இடமளிக்கிறதையும் நாம் காணலாம்.

வீடுகளில் உணவு உண்கிற முறை நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் மாறி வருகிறது. உணவுக்கு உண்ணப் பயன்படுகிற தட்டுக்கள் போல உலோகச் சமையற் கலங்களும் கரண்டிகளும் சட்டி, பானை, அகப்பை போன்றவற்றின் இடத்தைப் பிடித்து வருகின்றன. இவை நமது பண்பாட்டின் சிதைவோ சீரழிவோ அல்ல. மாறாக நவீன உற்பத்தி முறையின் விளைவான பொருளியல் மாற்றங்களின் தவிர்க்க இயலாத விளைவுகளே.பிளாஸ்ரிக் குடங்களும் அலுமினியச் சமையற் கலங்களும் உடல் நலத்திற்கு கேடானவை என்பதும் விறகடுப்பிற் சமைப்பதே சிறப்பானது என்றும் வாதிப்போர் மட்குடங்களில் தண்ணீர் சுமந்தும் மட்பாண்டங்களில் விறகடுப்பிற் சமைத்தும் பழக்கப்பட்டிருந்தால் தமது வாதங்களை மாற்றிக் கொள்ளக் கூடும். இவ்வாறான விடயங்களில் சமையலில் ஈடுபடுவோரின் தெரிவுகள் நடைமுறை அனுபவத்தின் அடிப்படையிலானவை. இத் தெரிவுகளின் பாதகமான விளைவுகளைச் சுட்டிக் காட்டுவோர் மரபு வழி நடைமுறையின் பாதகமான அம்சங்களை எவ்வாறு திருத்துவது என்பது பற்றியுங் கவனங் காட்ட வேண்டும்.

உணவு பரிமாறலிற் போன்று சமயத் தொடர்பான விடயங்களிலும் பண்டிகைகளின் போதும் பித்தளைப் பாண்டங்களும் மட்பாண்டங்களும் மர அகப்பைகளும் பயன்பட்டாலும் அலுமினியமும் எவர்சில்வரும் பிளாஸ்ரிக்கும் பல இடங்களில் பெருகி வருமளவிற் பயன்படுகின்றன.

தோற்றப்பாடான மரபு பேணலுக்கு ஒரு உதாரணமாக ஹோட்டல்களில் சூடேற்றிகள் மீது வைக்கப்பட்ட மண் சட்டிகளிலும் பானைகளிலும் தமது "தேசிய உணவு வகைகள்" வைக்கப்பட்டிருக்கிறதைச் சொல்லலாம். சமையல் முற்றிலும் பெரிய எவர்சில்வர் அல்லது அலுமினியக் கலத்திற் செய்யப்பட்ட கலங்களிலேயே செய்யப்பட்டுச் சட்டி பானைகளில் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது மரபு மீதான ஒரு போலிக் கவர்ச்சி தொடர்பானது. சுற்றுலாப் பயணிகளை கவரப் பயன்படுகிற இந்த உத்தி மரபினின்றும் வெகுதூரம் விலகிய நவீன வாழ்க்கை வாழும் வசதி படைத்த நடுத்தர வர்க்கத்தினருக்கும் ஒரு வகையான 'தேசிய உணர்வு' சார்ந்த கவர்ச்சியை ஏற்படுத்துகிறது.

எவ்வாறாயினும் நமது பண்பாட்டில் மிக வேகமாக மாறிவருகிற ஒரு பகுதி நமது உணவும் உணவுப் பழக்கங்களும் என்பதை யாரும் மறுக்க இயலாது. ■

---

## மலையக அரசியல்...

4ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றுக் கொண்டவை எவை? விடை பூஜ்யம்,..... பூஜ்யம்.......

ஒரு சில தோட்டங்களுக்கு வழங்கும் வாத்தியக் கருவிகளும் கோவில் சிலைகளும், அன்னதானத்திற்கு அரிசி மூடைகளும், கரப்பந்தாட்ட பந்துகளும், சற்று மேல் சென்று மேதின, தேர்தல் காலங்களில் மது போத்தல்களும் எத்தகைய விடுதலையைப் பெற்றுத் தந்துள்ளன? மக்களின் அரசியலறிவு எவ்வாறு இருக்கிறது. (நுவரெலியா பிரதேச சபைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் 71,000. நிராகரிக்கப்பட்டவை 5000 வாக்குகள். நமக்கும் 75 ஆண்டுகள் ஜனநாயக தேர்தல் அனுபவம்) மக்களின் கல்வியறிவு, போஷாக்கு, வருமான மட்டம், வாழ்க்கைத்தரம், சிந்தனை விருத்தி, குழந்தை கல்வி, சிறுவர் உரிமைகள் என எல்லாத் துறைகளிலும் நீளும் பட்டியலுக்கு இருக்க வேண்டிய பதில் என்ன என்பது பற்றியெல்லாம் எதுவித கவலையுமற்று அரசாங்கத்தின் குளிர்ச்சி பெற மக்களை பொதி மணலில் தொடர்ந்தும் நிறுத்தி மகிழும் தலைவர்களே நிறைந்துள்ளனர்.

பொய்மையும் பூச்சாண்டித்தனமும் அணிதாவலும் நாளுக்கு நாள் கொள்கை மாற்றம், மக்களை அழிக்கும், சிதைக்கும் பேரினவாத சக்திகளுக்கு ஆதரவு, காட்டிக் கொடுப்பு, அமைச்சர் பதவி எனும் எல்லாவித வெகுஜன விரோதப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இவர்களின் புரட்சிக்கு அர்த்தமாக திருமகள் தமிழகராதி சொல்லும் பிறழ்வு, மாறுதல், ஒழுங்கின்மை எனும் அர்த்தத்திலாக இருக்கலாமோ......? அப்படியாயின் அவர்களின் 'புரட்சி' அவர்களுக்கு சரியாகவே இருக்கலாம்.

மலையக மக்களுக்கான உண்மையான விடுதலை எது என்பது பற்றிய தெளிவான பார்வையோடும் மக்கள் புரட்சி என்பது என்ன என்பது பற்றியும் நன்கறிந்த அரசியலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பலமான மக்கள் ஆதரவு இன்றி இலை மறை காய்களாய் தம் ஆதங்கங்களை செயற்பாடுகளாக முன்னெடுக்கிறார்கள். அவர்களின் நல்ல நோக்கங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மலையக மக்களின் வாழ்வின் சகல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படுத்த உண்மையான உணர்வோடு உழைத்துக் கொண்டிருக்கும் அவர்கள் இனங்காணப்படும் போதும் அதிகாரங்கள் அவர்களின் கைகளுக்கு மாற்றப்படும் போதுந்தான் மலையக மக்களின் வாழ்வில் உண்மையான விடுதலைக்கான முதலாவது குரல் ஒலிக்கும்.

வே.தினகரன்
பத்தனையூர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சிறந்த உலகத்திற்கான வாய்ப்பு சோஷலிஸத்திற்கு மாற்றாகாது



வரலாறு என்னை விடுதலை செய்யும் என்ற வாக்கியத்துடன் முடிவடையும் உரை தோழர் பிடல் கஸ்ரோ நீதிமன்றத்தில் ஆற்றிய உரை ஆகும். சண்டியாகோ டி. கியூபாவிலுள்ள மன்காட்டா படைத்தளத்தின் மீது கஸ்ரோகவும் அவந்து தோழர்களும் தாக்குதல் நடத்தியமைக்கு எதிராக அன்றைய கொடுங்கோலாட்சியால் அவர்மீதும் அவரது தோழர்கள் மீதும் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. அவ்வழக்கின் முடிவில் கஸ்ரோ நீண்ட உரையொன்றை ஆற்றினார். அவ்வுரை கியூபாவின் அன்றை அரசியல் நிலைமைகளை விளக்குவதாக இருந்தது. அவ்வுரையை முடிக்கும் போது வரலாறு என்னை விடுதலை செய்யும் என்ற வாக்கியத்துடன் முடித்தார்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி கஸ்ரோ கடுமையான சுகவீனமடைந்தார். தற்போது அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவருக்கு பதிலாக கியூபாவின் தலைவராக பதில் கடமையாற்றுவதற்கு ராவுல் கஸ்ரோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வேளையில் சாமகமாக பயன்படுத்திக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபாவில் அரசியல் சதியை ஏற்படுத்தி அமெரிக்காவிற்கு சார்பான முதலாளித்துவ ஆட்சிமுறையை ஏற்படுத்த பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இவை வெளி வெளியாக தெரிகின்ற விடயங்களாகும்.

இதை விட வெளிவெளியாக தெரியாத பல நச்சுக்கருத்துகள் பரப்பப்பட்டு வருகின்றன. இதனை சோஷலிஸத்தை உச்சரிப்பதற்காக மட்டும் பயன்படுத்தும் போலி சோலிஸட்டுகளும், கம்யூனிஸ்ட்டுகளும் செய்து வருகின்றனர்.

'சோஷலிஸம் இல்லையேல் மரணம்' என்று சொல்லி வந்த கஸ்ரோ தற்போதைய சர்வதேச பரிமாற்றங்களை கருத்திற் கொண்டு சிறந்த 'உலகமான்றிற்கான வாய்ப்புண்டு' எனும் சுலோகத்தினை முன்வைத்துள்ளார் என்று பெ. முத்துலிங்கம் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இதனை 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' எனும் மகுடமிடப்பட்டு 20- 08- 2006 இல் வீரகேசரியில் வெளியான அவரது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாதெனில்.

1. கஸ்ரோவோ, கியூபாவோ, சோஷலிஸ கட்டுமானங்களை கைவிடவும் இல்லை. அதன் மீது நம்பிக்கை இழந்துவிடவுமில்லை.
2. 'சிறந்த உலகம் ஒன்றிற்கான வாய்ப்புண்டு' என்ற சுலோகம் கியூபாவினதோ, கஸ்ரோவினதோ அல்ல. அது உலக சமூக மாமன்றம் என்ற ஏகாதிபத்திய உலகமயமதாலுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட சமூக அமைப்புகளினதும், என். ஜீ. ஓக்களினதும் ஒழுங்குபடுத்தப்படாத அமைப்பினதாகும். அவ்வமைப்பில் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு மாற்று சோஷலிஸம் என்பதை விட 'சிறந்த உலகம்' என்பதை ஏற்றுக்கொள்ளும் அமைப்புகளே அதிகமிருக்கின்றன.
3. அவ்வமைப்பினூடாக ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரான பிரசாரங்களையும் வேலைத்திட்டங்களையும் பரந்துபட்ட மக்களையும் சக்திகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்பட முடியும் என்ற நம்பிக்கையில் பல கம்யூனிஸ் அமைப்புக்கள் அதில் இடம்பெற்றுள்ளன. அந்தவகையிலேயே கியூபாவும் அதில் இடம்பெற்றுள்ளது எனலாம்.
4. அதில் இணைந்திருக்கும் கம்யூனிஸ் அமைப்புக்கள் 'சோலிஸத்திற்கு' மாற்றை தேடும் வகையில் அதில் இயங்கவில்லை. மாறாக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஐக்கிய முன்னணியை கட்டும் முயற்சிகளிலேயே ஈடுபட்டுள்ளன எனலாம்.
5. அவ்வமைப்பிலுள்ள சோஷலிஸத்தை ஏற்றுக் கொள்ளாத பல அமைப்புகள் ஏகாதிபத்திய உலகமயத்திற்கு மாற்றாக சோஷலிஸம் வந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றன. அவற்றின் சுலோகமே 'சிறந்த உலகத்திற்கான வாய்ப்புண்டு' என்பதாகும்.

எனவே சோஷலிஸத்திற்கு மாற்றாக 'சிறந்த உலகத்திற்கான வாய்ப்புண்டு' என்ற சுலோகத்தை கஸ்ரோ ஏற்றுக்கொண்டார் என்பதுபோன்றும் அதன் மூலம் அவர் தற்போதைய சர்வதேச பரிமாற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளார். என்பது போன்றும் முத்துலிங்கம் குறிப்பிட்டுள்ளமை சரியாகாது.

அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளமைக்கு காரணமில்லாமல் இல்லை. அவர் முதலாளித்துவ கட்சிகளுடன் சமரசம் செய்துகொண்டு முதலாளித்துவ கட்சி அரசாங்கத்தில் பங்கெடுக்கும் நிலைப்பாட்டை கொண்ட ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டவராவார். அவர் என். ஜி. ஒ ஒன்றுக்கு பொறுப்பானவர்

பெருந்தோட்டக் கம்பெனிகளுடன் சமரசம் செய்யும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய கூட்டுஒப்பந்தத்திற்கான 15 தோட்டத் தொழிற்சங்கங்களின் யோசனைகளை முன்வைப்பதற்கு முக்கிய காரணகர்த்தாவுமாவார்.

அவரைப் போன்றவர்களின் மதிப்பீடுகள் கஸ்ரோ போன்றவர்களின் நிலைப்பாட்டை கொச்சைப்படுத்துவதாக இருக்கும். இவ்வாறு சோஷலிஸத்திற்கும் மாக்சிய லெனினியவாதிகளுக்கும் புதிய அர்த்தங்களை கற்பிப்பவர்கள் குறித்து கவனமாக இருப்பது நல்லது, முதலாளித்துவவாதிகளை விட திரிபுவாதிகளே அதிகமாக மாக்சியத்தை கொச்சைப்படுத்துகிறார்கள்.



# கோக்கா கோலா பெப்சிக்கு எதிராக இந்திய மாநிலங்களில் தடை இலங்கையில் எதிர்ப்பு இயக்கம் தேவை

இந்தியாவின் கேரளம், ராஜஸ்தான், குஜராத், அருணாச்சல் மாநிலங்களில் கோக்காகோலா பெப்சி மென்பானங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டு மாநில அரசு தடைவிதிக்கவில்லை. ஆனால் பாடசாலைகள் குறிப்பிட்டபொது நிறுவனங்கள் என்பவற்றில் மேற்படி மென்பானங்களைப் புறக்கணிக்கும் இயக்கம் வலுவடைந்து வருகின்றன.

கோக்கா கோலா- பெப்சி மென்பானங்களில் பூச்சி கொல்லி இரசாயன மருந்துகள் அளவுக்கு அதிகமாக இருந்து வருவதனால் அம்மென்பானங்கள் உடலுக்கு கேடு விளைவிக்கும் அபாயத்தைக் கொண்டிருக்கின்றன என்பதே தடைக்கான காரணமாகக் காட்டப்படுகின்றது. ஆனால் இதனையும் மீறிய வேறு காரணங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு மென்பான உற்பத்தி நிறுவனங்கள் உலகிலேயே ராட்சத பல்தேசிய நிறுவனங்களாகும். அவை அமெரிக்காவை அடித்தளமாகக் கொண்டவை. அவற்றின் குறிக்கோள் லாபம் லாபம் அதிகரித்த லாபம் குவிப்பதேயாகும். மக்கள் நலன்கள் பற்றி அப் பல்தேசிய நிறுவனங்களுக்கு கவலை கிடையாது.

இந்நிறுவனங்கள் இந்தியாவில் நிலத்தடி நீரை பலலட்சம் லீற்றர் அளவில் உறிஞ்சி எடுக்கின்றன. இதன் எதிர் விளைவுகள் விவசாயிகளையும் குடி நீருக்காக ஏங்கி நிற்கும் மக்களையும் கடுமையாகப் பாதிக்கின்றன. அதேவேளை கோடிக்கணக்கான இந்திய மக்களின் பணம் இம் மென்பானங்களின் மூலமாகவே கொள்ளையிட்டுச் செல்லப்படுகிறது. அதேவேளை உள்ளூர் உற்பத்தி மென்பானங்களைச் சந்தையில் காணமுடிவதில்லை. கோக்- பெப்சி மென்பான கலாச்சாரம் மக்களைப் பற்றிப் பரவி வருகின்றன. அவற்றின் ராட்சத விளம்பரங்களால் மக்கள் மயக்கப்படுகின்றனர். சினிமா நடிகர்கள் நடிகைகளுக்கு கோடிக்கணக்கில் கொடுத்து விளம்பரம் செய்யப்படுகிறது. சினிமாப் படங்களில் கதாநாயகன்- வில்லன் நடாத்தும் நீண்ட நேர அடிதடியில் கோக்- பெப்சி அடுக்கி வைக்கப்பட்ட போத்தல்களின் மேல் விழுந்து அவை நொருங்குவது தற்செயலான ஒன்றல்ல. அதற்கு கோக் பெப்சி நிறுவனங்கள் நிறையப் பணத்தை அள்ளி வீசுகின்றன. இத்தகைய கோக் பெப்சிக்கு எதிராகவே இந்தியாவில் எதிர்ப்பு இயக்கங்கள் பரவி வருகின்றன. அவை நியாயமானவையும் மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியவையுமாகும். தனியே பூச்சி கொல்லி மருந்து அளவு அதிகரித்து விட்டது என்பதற்காக மட்டுமன்றி ஏனைய காரணங்களையும் முன்னிறுத்தி குறிப்பாக அந்நிய மூலதன முதலீடுகளுக்கு எதிராகவும் புதிய பொருளாதாரக் கொலனித்துவ மேலாதிக்கத்துக்கு எதிராகவும் மக்களை அவை பற்றிய விழிப்புணர்வுக்கு உட்படுத்தும் இயக்கங்களும் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையே இந்திய இடதுசாரி இயக்கங்கள் வற்புறுத்தி வருகின்றன.

இவற்றின் அனுபவங்களில் இருந்து இலங்கையின் மக்களும் இளைய தலைமுறையினரும் கற்றுக் கொள்ளவேண்டும். கோக்- பெப்சிக்கு எதிரான முழுமையான எதிர்ப்பியக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். இதற்கான முன் முயற்சிகளை இடதுசாரி இயக்கத்தினர் முன்னெடுக்க வேண்டும்.

## தண்ணீர், தண்ணீர்

நீர் மறிப்பு மதகொன்றின் படலை அடைத்தனால்
வாய்க்கால் வரண்டு வயல்வெளிகள் காய்ந்ததனால்
பயிர்கள் பல சோர்ந்து படுக்கத் தொடங்கியதால்
படலை திறக்கப் பேசியொரு வழிதேட
வாய்பிருந்தும் வழியிருந்தும் போதாது பொழுதென்று
வானிருந்து குண்டெறிந்து நீரெடுப்போம் என்றுரைத்தார்
நெருப்பெடுத்துக் குண்டு மழை பெய்ததனாற் பெற்ற பயன்
குருதியிலே மண் தோய்ந்தும் வயல் வெளிகள் நனையவில்லை
போரென்றாற் போரென்ற சாத்தானின் பொன் மொழியும்
அமைதிக்காய் போரென்ற அறிவிலியின் அருள் மொழியும்
சேர்த்தே இரைமீட்டு போரில்லாப் போர் செய்தார்
மனிதாபிமானத்தின் பேராலே படை திரட்டி
மணி நாலு ஆறின்முன் நீர்வழியச் செய்வமெனச்
சொகுசான குளிரறையிற் குந்தி இருந்தபடி
சூளுரைத்தார், அணை இன்னும் அரையடிதான் தொலைவென்றார்
மாற்றிக் கதைத்து நாளை மறு நாளை எனத்
தவணை மிகச் சொன்னார் அணை திறக்கும் முன்னாலே
அயலிலிருந்த ஊர்மாந்தர் ஊரிழந்தார் மண்ணிழந்தார்
தஞ்சமெனத் தாம் புகுந்த தலங்களிலும் உயிரிழந்தார்
தாம் மனிதர் என்றவொரு தன்மானச் செருக்கிழந்தார்
அடிமைகளாய் அகதிகளாய் அயலூரில் அல்லல்மிக
ஆயிரம் பல்லாயிரமாய் ஆட்கள் குவிந்தாலும்
மனிதாபிமானத்தின் பேராலே ~~போரில்லாப்~~ போருக்கு
அழகழகாய் பேர் புனைந்து அலையலையாய்ப் படை திரட்டிக்
குருதியிலே முகங் கழுவிக் கண்ணீரிற் கால்கழுவக்
கருணையுடன் குண்டெறிந்து படலை திறப்பாரோ
வாய்க்கால் வழிந்தாலும் வயல்கள் நிறைந்தாலும்
இயல்பான வாழ்க்கைக்கு திரும்புகிற வழி மறித்துப்
பொருளின்றித் தொடக்கி வைத்த போரில்லாப் போர் மட்டும்
முடிவின்றித் தொடர்கிறது.

-சேகர்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



**தேசியவாதச்...** 5ம் பக்கத் தொடர்ச்சி

தேசியம் தேசியவாதம் என்பது முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவாகிய ஒன்றாகும். அது நாடுகளின் தேசியமாக வரையறை பெற்று தேசங்கள் உருவாகின என்பது வரலாற்று நிகழ்ச்சியாகியது. அத்தகைய முதலாளித்துவ அடிப்படைகளைக் கொண்ட தேசியம் கொலனித்துவத்திலிருந்து விடுபடுவதற்கு ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒரு வகை ஆயுதமாகப் பயன்பட்டது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அதே தேசியம் சுதந்திரத்திற்கு சற்று முன்பிருந்தே பெருந்தேசிய அகங்காரம் எனும் நிலையை எடுக்க ஆரம்பித்தது என்பது ஒருவரலாற்றுச் சோகமாகும். இந்நிலை அநேக மூன்றாம் உலக நாடுகளில் காணப்படச் செய்கின்றது.

இப் பெருந்தேசிய அகங்காரம் என்பது இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை மேன்மேலும் கூர்மைப்படுத்தி இன ஒடுக்கு முறையாக வளர்த்தெடுத்துக் கொண்டது. இந்த இன ஒடுக்கு முறையானது சிங்கள ஆளும் வர்க்க மேட்டுக்குடியினரின் நலன்களுக்கும் தேவைகளுக்கும் பயன்பாடானதாக இருந்து வந்ததுடன் அவர்களுடன் இணைந்து நின்று ஏகாதிபத்தியத்தின் நவ கொலனித்துவ நலன்களின் பாதுகாப்பரணாகியும் கொண்டது.

இத்தகைய பெருந்தேசியவாத ஆளும் வர்க்க அகங்கார நிலையை எதிர் கொள்வதற்கு தேசிய இனங்களின் தலைமைகள் பாராளுமன்றத்தையும் அகிம்சைக் கொள்கையையும் பயன்படுத்தி வந்த அதே வேளை வர்க்க சாதிய நிலைகளில் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஐக்கியம் பூண்டு நின்றனர் என்ற உண்மை மறப்பதற்குரிய ஒன்றல்ல.

தமிழ்த் தேசிய இனத்தின் தலைமைத்துவம் அன்று முதல் இன்று வரை அது அகிம்சையைக் கடைப்பிடித்த வேளையிலும் பின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தைக் கையில் எடுத்த சூழலிலும் தமிழ்த் தேசியத்தையே உயர்த்தி நின்றன. அத் தமிழத் தேசியத்தின் கீழ் சமூக முரண்பாடுகள் ஏற்றத்தாழ்வுகள் கடந்த செயற்கையான ஐக்கியத்தையே கோரி நின்றனர். இவ்வாறு கோரிய தலைமைகள் தமிழ்ப் பழைமைவாத மேட்டுக்குடி கருத்தியல் சிந்தனைப் போக்கையே உட்கருவாகக் கொண்டிருந்தனர். அத்துடன் நிலவுடைமை முதலாளித்துவம் என்பனவற்றை அரவணைத்து நின்றதுடன் ஏகாதிபத்தியத்தை சொல்லாலோ செயலாலோ எதிர்க்கத் துணியாத தேசியத்தையே தமிழ்த் தேசியமாக ஏற்கும்படி வற்புறுத்தியும் வந்தனர். பேரினவாதத்தையும் அதன் ராணுவ ஒடுக்குமுறையையும் எதிர்த்து நிற்பதில் தமிழ்த் தேசியத்தின் சார்பாகக் காட்டப்படும் உறுதியான நிலை வரவேற்கப்படவேண்டியதும் ஆதரிக்கப்பட வேண்டியதுமாகும். ஆனால் நிலவுடைவாத ஏகாதிபத்திய சார்பு நிலைப்பர்டு எவ்வகையிலும் ஏற்கப்பட முடியாதவைகளாகும். அவை மட்டுமன்றி விரும்பியோ விரும்பாமலோ அன்றி தெரிந்தோ தெரியாமலோ ஏகாதிபத்திய நலன்களுக்கு உதவும் வகையில் பேரினவாத எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதும் அதன் அடிப்படையில் தீர்வுக்கான பெற முடியாத அதி உயர் கோரிக்கைகளை முன் வைப்பதும் சாத்தியமற்ற வழிமுறை என்றே கொள்ளப்பட முடியும். இதனை பெரும் தேசியவாத அகங்காரத்திற்கு எதிராக நிறுத்தப்படும் குறுந்தேசியவாத நிலைப்பாடாகவே காண முடியும். அத்தகைய நிலையானது பேரினவாதம் மேலும் ஊட்டம் பெறுவதற்கும் ஏகாதிபத்தியம் பயன்பெறவுமே உதவக் கூடியதாகும்.

இந்நிலைக்குப் பதிலாக தமிழ்த் தேசியம் முற்போக்கானதும் ஜனநாயகத் தன்மை கொண்டதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உடையதுமான போராட்டப் பாதையில் பயணித்தாலே தமிழ்த் தேசிய இனம் உண்மையான விடுதலையைப் பெற முடியும். அத்துடன் ஏனைய தேசிய இனங்களான சிங்கள முஸ்லீம் மலையகத் தமிழ் தேசிய இனங்களுடனும் அவற்றின் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் வர்க்க சக்திகளுடன் பொது இணக்கத்தையும் ஐக்கியத்தையும் காண இயலும். எனவே தேசியவாதச் சிந்தனைகளின் வர்க்க அடிப்படைகளையும் அவற்றின் வரலாற்று வளர்ச்சியையும் புரிந்து கொள்வது இவ்வேளை அவசியமாகிறது.

---

**கிட்டு...** 4ம் பக்கத் தொடர்ச்சி

வற்றிற்கு பயந்து அகதியாக ஓடி விடுமாறு கூறுவது இலகு. மாறாக இந்த நிலையை எதிர்த்து இந்நிலையை மாற்ற வெகுஜன போராட்டங்களை முன்னெடுத்து இந்த நாட்டில் வாழக்கூடிய அனைத்து இனங்களையும் ஐக்கியப்பட வைப்பது கடினம். இந்த நல்ல காரியங்களை உங்களைப் போல் "ஜிங்ஜக்" அடிப்பவர்களாலும் பின்பாட்டுப் பாடும் அரசியல் தலைமையாலும் செய்ய இயலாது. மாற்றாக புரட்சிகர அணியால் இயலும்.

இந்திய வம்சாவழித் தமிழர் என்பதை மாற்றி மலையகத்தமிழர் என்று கூறி ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளச் செய்யவே பல போராட்டங்களை செய்ய வேண்டிய சூழ்நிலையில் தயவு செய்து இந்தியாவை நம்பி ஏமாறாதீர்கள்.

எந்த ஒரு இடத்திலும் யாரும் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும். இங்கு அடிபட்டு அங்கும் அங்கு அடிபட்டு இங்கும் ஓடுவது எவ்வளவு காலத்திற்கு தொடரப்போகிறது. இந்நிலை மாறி ஒவ்வொரு தேசிய இனமும் தமது சொந்த இடங்களில் ஐக்கியப்பட்டு வாழ வேண்டும். அது முடியாத பட்சத்தில் அதற்குத் தீர்வைத் தர வல்லது புரட்சிகர வெகு ஜனப் போராட்ட மார்க்கமே.

எனவே ஐயா! முடிந்தவரை உங்கள் பிற்போக்குத்தனமான பார்வையை முடிந்தால் மாற்றிக் கொள்ளவும். இவ்வாறாக

நன்றி

இப்படிக்கு

கிட்டு

# பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்

-ஏகலைவா-

இம்மாதம் 11ம் திகதியுடன் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டு 5 ஆண்டுகள் முடிவடைகின்றன. உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை அமெரிக்கா தொடக்கி 5 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று சொல்வதே பொருத்தம். இந்தக் காலப்பகுதியில் உலகில் ஏற்பட்ட மாற்றங்களை ஒரு பார்வையில் பார்த்தால் ஏகாதிபத்திய அநியாயங்கள் நிரம்பி வழிவதைக் காணலாம். 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' என்று சொற்தொடரே போரின் மூலமே பயங்கரவாதத்தை அழிக்க முடியும் என்ற கோட்பாட்டை நிறுவுவதாகவே உள்ளது. இது ஆப்கானில் தொடங்கி பல வடிவங்களை எடுத்து இன்று லெபனானில் வந்து நிற்கிறது.

9/11 தாக்குதல்களைத் தொடர்ந்து 'பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுகிறேன் பார்' என்ற கோஷத்தோடு பிரித்தானியா முதலான தனக்குத் தலை அசைக்கும் நாடுகளுடன் தனது கோர முகத்தை காட்டத்தொடங்கியது அமெரிக்கா. முதலில் தலிபான்களையும் ஓசாமா பின்லாடனையும் ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டி அங்கிருந்த பல்லாயிரக்காணக்கான மக்களையும் அவர்களது வாழ்விடங்களையும் அழித்து பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டதாக கூச்சல் போட்டன அமெரிக்காவும்

பின்னர் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரியை நேர் கண்ட போது 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் எப்போது முடிவுக்கு வரும்' என்ற கேள்விக்கு "கடைசிப் பயங்கரவாதி கைப்பற்றப்பட்ட பின்னரோ அல்லது கொலை செய்யப்பட்ட பின்னரோ முடிவுக்கு வரும்" என்று அவர் அளித்திருந்த பதில் இதன் உண்மையான நிலையை தெளிவுபடுத்தும். கடைசிப் பயங்கரவாதியை கைது செய்வதெப்போ? பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிவதெப்போ?

அமெரிக்காவின் முகமூடியை கிழித்த அபுகிராப் படங்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி புஷ் இவ்வாறு சொன்னார். "அபுகிராப்பில் நடந்துள்ளவை நானறிய அமெரிக்காவை பிரதிபலிக்கவில்லை. நானறிந்த அமெரிக்கா அன்புமயமானது. சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டது. நானறிந்த அமெரிக்கா ஈராக்கில் சுதந்திரத்தைத் தோற்றுவிக்கத்தான் இராணுவத்தை அனுப்பியுள்ளது."

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது மனிதகுலத்துக்கே பொதுவானதாக ஏகாதிபத்தியங்களால் சித்தரிக்கப்படுகிறது. அமெரிக்கா சொல்கிற பயங்கரவாதிகளையும் பயங்கரவாதத்தையும் ஆண்டாண்டு காலமாய் உருவாக்கியதும் நடைமுறைப்படுத்தியதும் இதே அமெரிக்காதான்.

## கடந்த 5 ஆண்டுகளில் நடந்தது என்ன?

அதன் நேசநாடுகளும். தொடர்ந்து அங்கு பொம்மை அரசாங்கமொன்றை நிறுவி ஜனநாயகத்தை கேவலப்படுத்தினர். அமெரிக்கா சொல்லும் அமைதியான ஜனாநாயகமாக ஆப்கான் இல்லை. மக்கள் மிகக்கொடிய வறுமையில் வாடுகிறார்கள். வாழ்வாதாரங்களை அடித்து நொறுக்கி விட்டு வெற்றிகரமாக வெளியேறின அமெரிக்கப்படைகள்.

உயிர் வாழ்க்கைக்கே ஆப்கான் மக்கள் அந்தரிக்கையில் ஜனநாயகத்துக்கு முண்டுகொடுக்க, இந்தியா ஆப்கானில் மிகுந்த செலவில் ஒரு பாராளுமன்றத்தை கட்டிக் கொண்டு இருக்கிறது. பயங்கரவாத்திற்கு எதிரான யுத்தத்தின் முதலாவது பலி ஆப்கான் தேசமும் ஆப்கான் மக்களுமே. இன்று அடிக்கடி குண்டு வெடிப்புக்களிலும் தாக்குதல்களிலும் குருதியில் குளிக்கிறது ஆப்கானிஸ்தான். உலக வரலாற்றில் பிற நாடுகளால் ஆப்கான் கைப்பற்றப்பட்ட போதெல்லாம் குழப்பம் நிறைந்ததாகவே இருந்திருக்கின்றது. ஆப்கானைக் கைப்பற்றிய நாடுகள் தோல்வியைச் சந்தித்த வரலாறே உண்டு. சோவியத் ரஷ்யாவின் அழிவின் இறுதிக்கட்டம் ஆப்கானில் இருந்து வெளியேறுவதிலேயே தொடங்கியது. வரலாறு இப்போதும் தொடர்கிறது. ஆப்கானைத் தாக்கி சாதித்தது மக்களைக் கொன்று குவித்தது மட்டுமே. தலிபான்கள் ஒழியவுமில்லை. ஒசமா அழியவுமில்லை. தமது புதிய ஆயுதங்கள் ஒழுங்காக வேலை செய்கின்றனவா எனப் பரீட்சிப்பதற்கான ஒரு களமாக ஆப்கான் பயன்படுத்தப்பட்டது. அவ்வளவு தான். இவ்வாறு ஜனநாயகத்தை தூக்கி நிறுத்தியது அமெரிக்கா.

அதன் பின்னர் தனது 'புதிய அமெரிக்கா நூற்றாண்டுக்கான திட்டம்' என்பதில் உள்ளபடி முழு உலகையும் தன் கைப்பிடிக்குள் கொண்டுவர பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை ஆயுதமாக அமெரிக்கா பயன்படுத்தத் தொடங்கியது. பேரழிவு ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக் கூறி ஈராக்கைத் தாக்கி நிர்மூலமாக்கி அங்கும் தனது ஜனநாயகத்தை நிறுவியுள்ளது. அங்கு அமெரிக்கா கூறிய பேரழிவு ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்படவே இல்லை. இன்று இன்னொரு வியட்னாமில் நிற்கின்றன அமெரிக்கப்படைகள்.

இதுவரை ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஈராக்கியப் பொதுமக்கள், ஈராக் மீதான ஆக்கிரமிப்பின் விளைவாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தினம் ஒரு குண்டுவெடிப்பு, தினம் ஒரு குண்டுவீச்சு என ஒரே பிண ஊர்வலமாகக் காட்சியளிக்கிறது அமெரிக்கா இரட்சித்த ஈராக். கடந்த ஐந்து ஆண்டுகளில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் செய்த சாதனைகள் எவையென பார்ப்பது இங்கு சாலப்பொருத்தம்.

1. ஆப்கான், ஈராக் என இரண்டு நாடுகளில் போர் செய்து பல்லாயிரக்கணக்கான மக்களையும் சொத்துக்களையும் இல்லாதொழித்தது.
2. அமெரிக்கா சார்பு பொம்மை அரசுகளை அங்கு நிறுவி ஜனநாயகத்தைக் காத்தது.
3. குவான்டனாமோ, அபுகிராப் சிறைச்சாலைகள் மூலம் அமெரிக்கா தன்னை மனித உரிமைகளின் காவலனாக வெளியுலகிற்கு காட்டிக் கொண்டது.
4. ஐக்கியநாடுகள் சபை பிரயோசனம் இல்லாத ஒன்று என்பதை உலக மக்களுக்கு தெளிவுபடுத்தியது.

9/11 தாக்குதல்கள் நடந்து ஒரு வருடத்தின் தான் எண்ணெய்க்காக ஈராக்கைத் தாக்கவில்லை என்பதை நிறுவுவதற்கு 'ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படைகளுக்கு தேவையான எண்ணை ஈராக்கில் இல்லை. பிற மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தே நாம் எமக்கு தேவையான எண்ணையைப் பெற்று கொள்கிறோம்' என்று பொய்யொன்றை அண்மையில் அவிழ்த்து விட்டது. இது போன்ற பெரிய பொய்களை அமெரிக்காவைத் தவிர்ந்து வேறு யாராலும் அவிழ்த்து விட முடியாது.

இந்த யுத்தம் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவின் ஆதரவுக் கூட்டணி குறைந்து கொண்டே வந்திருக்கிறது. போதாக்குறைக்கு தருணம் கிடைக்கும் போதெல்லாம் ஏகாதிபத்தியங்கள் தங்களுக்குள் வாய்வீச்சுக்களால் அடிபட்டும் கொண்டன.

இவ்வாறு பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது பாதுகாப்புக்கான ஒரு விடயமாக அமெரிக்காவால் பாவிக்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் எதை எல்லாம் அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற கோஷத்தில் அடக்கியுள்ளது என்று பார்த்தால் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவது கூட பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாக மாறியுள்ளது. அந்த வகையில் தனக்கு விருப்பமில்லாதவர்களுக்கு பயங்கரவாத லேபிளை ஒட்டுவதை அமெரிக்கா வழக்கமாக கொண்டுள்ளது.

அவ்வகையில்

* பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் நாடு ஈரான்.
* ஈரானும் வடகொரியாவும் மனித குலத்தின் எதிரிகள்.
* வெனசுவேலா அமெரிக்கப் பாதுகாப்பிற்கு அச்சுறத்தலாக இருக்கிறது.
* கியூபாவில் ஜனநாயகம் இல்லை, பயங்கரவாதம் நிலவுகிறது. அங்கு ஜனநாயகம் மலர வேண்டும்.
* நேபாள மாவோயிஸ்டுகள் பயங்கரவாதிகள். பயங்கரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதை அனுமதிக்கக் கூடாது.

இந்த நிலையில் சில விடயங்களைநாம் தெளிவாக உள்வாங்க வேண்டும்.

* பயங்கரவாதத்திற்கு எதிராக என்பதன் பெயரால் ஏகாதிபத்தியப் பயங்கரவாதம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
* பயங்கரவாதம் என்பது யுத்தத்தினால் முடிவுக்கு கொண்டுவரக்கூடியது அல்ல.
* மக்களின் விருப்பங்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புக்கள் ஒரு போதும் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது.

பக்தாத்தில் ஒரு ஈராக்கியன் ஒரு அமெரிக்கப்படைவீரனை நோக்கி நடந்து செல்லும் போது அமெரிக்கப் படைவீரனின் மனதில் அச்ச உணர்வே மேலோங்குகிறது. அவன் ஒரு தற்கொலை குண்டுதாரியாக இருப்பானோ என்ற எண்ணம் எப்போதுமே அவர்களை ஆட்கொள்கிறது.

எந்த அச்ச உணர்வை ஆயுதமாகக் கொண்டு அமெரிக்கா உலகை ஆள நினைக்கிறதோ அதே அச்ச உணர்வே அமெரிக்காவின் தோல்விக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின் தோல்விக்கும் காரணமாகிறது. ஒரு நாட்டு மக்களின் ஜனநாயகத்தையோ சுதந்திரத்தையோ தீர்மானிக்கும் உரிமை அந்நாட்டு மக்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது என்ற பாடத்தை கடந்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்கா உணர்ந்திருக்க வேண்டும். இல்லையெனில் அமெரிக்க அதிகார வெறிக்கு அமெரிக்க மக்களே பலியாவது தவிர்க்க இயலாதது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# படைப்பாளிகளுக்கு புரட்சிகர பாரம்பரிய சீன எழுத்தாளர் லூசுன்



## 125 வது பிறந்தநாள் நினைவாக

செம்டெம்பர் மாதத்தில் அதிமுக்கியமாக அறியப்பட்ட இலக்கியவாதிகள் பிறந்திருக்கிறார்கள் இது எண் சோதிடத்திற்கு வலுசேர்ப்பதற்காகவன்றி அவர்களை நினைவு கூர்ந்து பண்பாட்டு பாரம்பரியங்களை அறிந்து கொள்வதற்காகவே சொல்லப்படுகிறது.

சீனாவில் வாழ்ந்த லூசுன் செம்டெம்பர் 25 இல் பிறந்தார். அவரது நூற்றாண்டு (பிறந்த)தின நிகழ்வுகள் பலவற்றை கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும் தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தியது. இவ்வருடம் அவரது 125 வது நூற்றாண்டு என்பதால் சில விடயங்களை பகிர்ந்து கொள்வது அவசியமாகப்படுகிறது.

அவர் பிறநாட்டு இலக்கியங்களை சீனமொழியில் மொழி பெயர்பாகவே எழுத்துத்துறைக்கு அறிமுகமாகினார். அவரைப் பற்றி முற்போக்கு எழுத்தாளர்கள் எனப்படுவர்கள் அவரவர் நிலைப்பாட்டிற்கு ஏற்ப வகைப்படுத்திக்கொண்டனர்.

அவரது கவிதைகள், கதைகள் போன்றன அவருக்குரிய தனியான பாணியை கொண்டிருந்தன. அவர் சீன பாரம்பரிய இலக்கியங்களிலும் வெளிநாட்டு இலக்கியங்களிலும் ஆழமான அறிவுடையவராக இருந்தார். வெளிநாட்டு இலக்கிய அறிவின் அவசியம் பற்றி உணர்த்திய அவர் சுதந்திரமான தேசிய பாணியிலான இல்க்கியத்தை வலியுறுத்தினர். இது சீனமக்களிடத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அவர் கையாண்ட புரட்சிகர, சர்சைக்குரிய அணுகுமுறை ஆகும்.

சிலர் லூசுனுக்கு இருந்த வெளிநாட்டு இலக்கியம் பற்றிய கருத்தை மறைத்து அவரை சீன இலக்கிய பாரம்பரியத்தில் மட்டும் குறுக்கிக் காட்டும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

சீனமக்களுக்காக இலக்கியம் படைத்தப்போதும் அவரிடம் வெளிநாட்டு இலக்கியத்தின் செல்வாக்கே இருந்தது என்று இன்னும் சிலர் கூறிவந்தனர்.

அவர் சீன இலக்கியம் பற்றி பேசும்போது "எங்களது பண்பாடு பின்தங்கியது...... தவிர்க்க முடியாதபடி எங்களது படைப்புகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன. அதனால் நாம் அயராது வெளிநாடுகளிலிருந்து பலவற்றை படிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். ஆனால் "எல்லா வெளிநாட்டு இலக்கியங்களிலும் நேர்மறையான சாதகமான விடயங்களே இருக்கின்றன" என்று கூறமுடியாது என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை மனிதகுலத்தின் அனைத்து பண்பாட்டு பாராம்பரியங்களிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சீன- சோவியத் அரசியல் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அவரை பார்த்தவர்கள் அவரை சீன தேசிய எல்லைக்குள்ளேயே பார்க்கலாயினர். அவரை ஆதரிப்பதாக கூறியவர்களும் அவரை விமர்சிப்பதாக கூறியவர்கள் கூட அவரை சீன எழுத்தாளராகவே பார்த்தனர். அவரை பிறஹன் (கிரீஸ்) மிக்கிவிக்ஷ் (போலாந்து) பெட்டோ.ஃபி (ஹங்கேரி) போன்ற தேசிய விடுதலை கவிஞர்களின் படைப்புகள் ஈர்த்துள்ளன. செக்கோவ் கோர்க்கி போன்ற ரஷ்ய புரட்கர எழுத்தாளர்கள் பெரிது அவரை ஈர்த்துள்ளனர். இவர்களை உள்வாங்கிய லூசுன் சீன சமூகம் பற்றியும் மக்களின் வாழ்க்கைப் பற்றியும் ஆழமாக ஆய்ந்தார். சீன மக்களை நேசித்ததுடன் அவர்களுள் புரட்சிக்கான உந்து சக்திகளை தேடும் பணியில் அவர் அவதானியாகவும் இருந்தார்.

அவர் விவசாயிகள் மத்தியிலும் புத்திஜிவிகள் மத்தியிலும் சீனசமூகம் பற்றிய கண்ணாடியாக 1911 புரட்சி முதல் முதலாவது புரட்சிகர மக்கள் யுத்த காலம் வரை (1925- 1927) மிகவும் செழுமையான படைப்புகளை தந்துள்ளார். அவை நிச்சயமாக சீன வடிவத்தையும் சீன பாணியையும் கொண்டவைதான். ஆனால் முழுக்க முழுக்க சீனப்பாரம்பரிய இலக்கியங்களிலிருந்து விடுபட்டவை. வித்தியாசமானவை.


அவர் ஆரம்பத்தில் பாரிய சமூக குழுக்களை தேர்ந்தெடுத்தார். வர்க்கங்களிடையேயான எதிர்ப்புணர்வு, முரண்பாடுகள் மேல்வர்க்கத்தின் சிறப்புரிமைகள், கீழ்வர்க்கங்களின் துன்பங்கள் பற்றி கவனம் செலுத்தியுடன் கீழ்வர்க்க, அடக்கப்பட்ட மக்களின் பக்கமே நின்றார். பின்பு நுண்ணிய விடயங்களில் கவனஞ் செலுத்தி மக்களை அணிதிரட்ட உதவினார்.

இரண்டாயிரம் வருட வரலாறுடைய சீன நிலப்பிரபுத்துவ சமூகத்தில் (கூலி) விவசாயி ஒருவரேனும் எந்தவொரு கதையிலும் கதாநாயகனாக சித்தரிக்கப்பட்டிருக்கவில்லை. லூசுனின் கதைகளிலேயே முதன் முதலில் விவசாயிகள் கதாநாயகர்களானார்கள். அவர் புத்தியஜீவிகளின் முற்போக்கான அம்சங்களையும் வெளிக்கொணர்ந்தார். அவர் சீனப்புரட்சிக்கான நியாயத்தை நிறுவியதுடன் புரட்சியின் உந்து சக்தியாக வாழ்ந்தார். இதற்கு ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய யதார்த்தமான படைப்புகளில் ஆதாரங்களை தேடியதாக அவர் கூறியுள்ளார்.

ஆக, லூசுன் பாரம்பரிய சீன எழுத்தாளருமல்லர், சீனப்பாரம்பரிய எழுத்தாளருமல்லர். சீனாவுக்கு மட்டுமுரிய எழுத்தாளருமல்லர். அவர் புரட்சிகர பாரம்பரிய சீன எழுத்தாளர். இது அவரை பற்றிய சிறுகுறிப்பு. இன்னும் தேடுவோம். புரட்சிகர பாரம்பரிய இலங்கைப் படைப்பாளிகளாகப் பரிணமிப்போம்.

ச. மகாவிஷ்ணன்

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## எத்தனையாவது தடவை

ஃபிடல் காஸ்ரோவுக்கு சுகயீனம் வந்ததுதான் வந்தது மேலைத்தேய ஊடகங்களுக்கு அடித்தது லக். எல்லா ஊடகங்களும் போட்டி போட்டுக் கொண்டு தங்களது உண்மைகளையும் புதிய தகவல்களையும் பிரசுரித்துத் தள்ளின. அதில் அனேகமானவை ஃபிடல் இறந்துவிட்டார் என்ற செய்தியை பல்வேறு வடிவங்களில் தங்கள் புலனாய்வு அடிப்படையில் வெளியிட்டன. B. B. Cயும் தன் பங்குக்கு "ஃபிடலுக்கு பின்னான கியூபா" என்றொரு ஆவண தொகுப்பை ஒளிபரப்பித் திருப்திப்பட்டுக் கொண்டது. ஃபிடல் ஊடகங்களால் கொல்லப்பட்டது இது முதன்முறையன்று. ஊடகங்களால் அதிக தடவை கொலை செய்யப்பட்டவர் ஃபிடல் காஸ்ரோவாகத்தான் இருக்க முடியும். இம்முறை ஊடகங்கள் தங்கள் ஊடக சுதந்திரத்தின் அடிப்படையில் ஃபிடல் இறந்துவிட்டார் என்று சொல்லி சந்தோசப்பட்டுக் கொண்டிருந்த போது கேட்கத் தோன்றியது 'இது எத்தனையாவது தடவை' என்று.

## யோக்கியத்தனம்

அடிக்கடி எதையாவது செய்து தான் இன்னும் உயிருடன் இருப்பதாய் காட்டிக் கொள்கிறது ஐ. நா. தனது சியோனிச சண்டித்தனத்தை காட்ட இஸ்ரேல் லெபனானின் அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்துக் கொண்டிருக்கையில் எதுவுமே நடக்காதது போல் செத்துக்கிடந்தது. மனித உரிமைகள், சர்வதேச சட்டம் என வாய்கிழியப் பேசும் ஐ. நா கடைசியில் அமைதியின் காவலன் அமெரிக்கா ஒரு தீர்மானத்தை வடிவமைத்து பாதுகாப்புச்சபையில் சமர்ப்பிக்க எல்லா ஆமா சாமிகளும் சேர்ந்து அதை நிறைவேற்றி வைத்தார்கள். அதன்படி இறந்து போன மக்கள் குறித்து எதுவித அக்கறையுமின்றி உடனடியாக 2 இஸ்ரேலிய படைவீரர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும். இவ்வளவு காலமும் ஐ. நா என்பது இருந்து பிரயோசனமில்லை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தோம். இனியாவது ஐ. நா அழியக்கடவ...

## தேசிய பானமாக....

இந்தியாவின் ஏழு மாநிலங்களில் பெப்சி, கோக்காகோலா ஆகிய பானங்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டு அவை தங்களது தொழிற்சாலைகளை மூடிவிட்டு உடனடியாக வெளியேறுமாறு அந்தந்த மாநில அரசுகளால் உத்தரவிடப்பட்டள்ளன. இவை மிக நீண்ட கால மக்கள் போராட்டத்தின் விளைவால் உருவானவை. இந்தப் பானங்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பவை மட்டுமன்றி நிலத்தடி நீரை அளவுக்கதிகமாக இல்லாமல் செய்பவை. இவற்றின் உற்பத்தியின் போது சுற்றாடல் மாசுபடுத்தப்படுகிறது. இந்த தடையைத் தொடாந்து பெப்சி நிறுவனம் தனது சந்தையை இந்தியாவில் தக்கவைக்க தனது புதிய தலைமை நிர்வாகியாக இந்திரா நூயி என்பவரை நியமித்துள்ளது. இந்தியர் தலைமை வகிக்கும் பானம் என்பதால் பெப்சியை இந்தியாவின் தேசிய பானமாக கட்டமைக்கும் முயற்சியே இது.... மேலதிக தகவல் சக்தி தொலைக்காட்சியில் இது தொடர்பான செய்திகள் காண்பிக்கப்படவில்லை. ஏனெனில் இலங்கையில் அவற்றை விநியோகித்து எங்களை சுரண்டிகாசு சம்பாதித்துக் கொண்டிருப்பது மகாராஜா நிறுவனம்தான்!

## இதுதான் சர்வதேச சட்டமாம்

லெபனான் அரசிற்கெதிராக அமெரிக்க நீதிமன்றமொன்றில் இஸ்ரேலிய வழக்கறிஞர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அதன்படி யுத்தத்தை தொடக்கியது லெபனானின் குற்றமென்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இஸ்ரேலியர்களுக்கு லெபனான் அரசு முழுமையாக நட்டஈடு தர வேண்டும். இன்றுவரை இஸ்ரேல் லெபனானில் நிகழ்த்திய அநியாயங்களுக்கு எந்த பதிலும் இல்லை. அவற்றிற்கு 'தற்பாதுகாப்பு நடவடிக்கை' என்பதன் பெயரால் சர்வதேச சட்டத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதுபோக லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பிரச்சனைக்கு அமெரிக்க நீதிமன்றத்தில் எப்படி வழக்குத் தாக்கல் செய்ய முடியும்? சர்வதேச நீதிமன்றம் அமெரிக்காவுக்கு இடம்மாறி விட்டதோ என்னமோ.... எனக்குத் தெரிந்தவரை அது கேக்கில் (HAGUE) இருந்ததாய் நினைவு. உலகம் போற போக்கில் எதுவும் எப்படியும் எவ்வாறும் எங்கேயும் மாற்றப்படலாம்.

## ஐந்து வருடம் கடந்த பின்னர்.....

உலகைக் காத்து அமைதியை நிலைநாட்ட புறப்பட்ட தேவதூதன் புஷ் 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தைத்' தொடங்கி 5 வருடங்கள் முடிவடைகின்றன. இப்போது உலகம் இன்னும் பாதுகாப்பற்றதாய் மாறி விட்டது. அமெரிக்க விடுதலையை விட சதாமின் ஒடுக்குமுறை மேலானது என்கிறார்கள் ஈராக்கியர்கள். ஈராக் யுத்தத்தில் இதுவரை கொல்லப்பட்ட பொதுசனத்தின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகம். இப்போது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் லெபனானில் வந்து நிற்கையில் தேவதூதன் சொல்கிறான். "பயங்கரவாதிகள் சுதந்திரத்தின் முன்னேற்றத்தைத் தடுக்க முயற்சிக்கிறார்கள். அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் பொதுமக்கள் சாவதெல்லாம் ஒரு விடயமே அல்ல. என்ன விலை கொடுத்தாவது சுதந்திரத்தையும் நியாயத்தையும் நாங்கள் நிலநாட்டுவோம்". அவர்கள் நிலை நாட்ட விரும்பும் சுதந்திரமும் நியாயமும் என்னவென்பதை எல்லோரும் கடந்த 5 ஆண்டுகளாக கண்டு வந்திருக்கிறார்கள்.

## இந்துத்துவாவின் இன்னொரு வடிவம்

குஜராத்தில் ஹிந்தி நடிகர் அமீர் கானின் திரைப்படங்கள் தடைசெய்யப்பட்டதுடன் அவரது உருவப்படங்களும் எரிக்கப்பட்டு பெரிய களேபரமே நடந்தது. இவ்வளவுக்கும் நடிகர் அமீர்கான் செய்த குற்றம் என்னவென்றால் நர்மதா அணைக்கட்டின் உயரத்தை அதிகரிப்பதற்கு எதிராக மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்துவரும் மக்கள் இயக்கமான 'நர்மதா பச்சோ அந்தோலன்' இற்கு ஆதரவாகக் குரல் கொடுத்துதான். குஜராத்தின் பாதுகாவலர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் பா. ஜ. க முக்தி மோட்சாவின் தலைவர் அமித் தக்கர் "அமீர்கான் குஜராத்தை அவமதித்துவிட்டார். குஜராத்தின் முதல் முதல் எதிரியான மேதா பட்கருடன் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டபோதே குஜராத் மக்களையும் குஜராத்தையும் அவமதித்துவிட்டார்" என்று இந்துத்துவாவின் தத்துவ முத்துக்களை உதிர்த்துள்ளார். பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படபோகும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்காக குரல் கொடுப்பது எப்படி மக்களை அவமதித்ததாகும் என்பது குஜராத்தின் பாதுகாவலர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கே வெளிச்சம். இந்துத்துவா எடுக்கும் பல வடிவங்களில் இதுவும் ஒன்று.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




# தேடியும் கிடைக்காத சிந்தனைகள்

புத்தகங்களை நாம் ஏன் வாசிக்கிறோம்? வாசகர்களைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்? ஒரு நூலை வாசித்து முடித்த பின்னர் என் மனதில் எழுந்த கேள்விகள் தாம் இவை. இந்த எண்ணங்களைத் தோற்றுவித்த பெருமைக்குரிய புத்தகம் 'உயர்தர அரசியல் சிந்தனைகள்'. பேராசிரியர் அம்பலவாணன் சிவராசாவால் எழுதப்பட்ட இந்நூல் 25 தலைப்புகளில் சிந்தனைகளைச்(?) சொல்கிறது. க.பொ.த. உயர்தர மற்றும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான அரசியல் நூல்களால் பெரிதும் அறியப்பட்டவர் ஆசிரியர். அவரது அந்நூல்கள் பல பதிப்புகள் பெற்றவை. அதேபோலவே இப்புத்தகமும் பல பதிப்புகள் பெறலாம். ஆனால் இதில் உள்ள விடயங்கள் பற்றியோ இவரது முந்தைய நூல்கள் பற்றியோ திருப்தி கொள்ள முடியாது என்பதுதான் உண்மை. தமிழில் அரசறிவியல் தொடர்பிலான பாடநூல்கள் இல்லாதவிடத்து இவரது நூல்கள் வாசிக்கப்பட்டே ஆக வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றன. இன்று கல்வியே வியாபாரமாக மாறிவிட்ட நிலையில் இன்னுமொரு வியாபாரத்திற்கான கல்வி நூலாகவே 'உயர்தர அரசியல் சிந்தனை'களைக் காண்கிறேன்.

அரசியல் சிந்தனைகள் என்பது சரி, அது என்ன உயர்தர அரசியல் சிந்தனைகள்! ஒருவேளை என்னைப் போன்ற சாதாரண மக்களுக்கு விளங்காத சிந்தனைகளோ என எண்ணியபடியே புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினேன். உண்மைதான் பல சமயங்களில் ஒன்றுமில்லாத சிந்தனைகள்தான் உயர்தர சிந்தனைகளாகின்றன. எந்தவொரு நூலுக்கும் எழுத்தாளனின் கல்வித் தகைமையோ அறிவோ வக்காளத்து வாங்க முடியாது. நூலுக்குள் இருக்கின்ற விடயதானமே நூலின் தரத்தைத் தீர்மானிக்கும். 'தமிழில் அரசியல் தொடர்பான நூல்கள் இல்லாத நிலையில் இவ்வாறு வெளியாகும் நூல்களை நாம் வரவேற்க வேண்டும்' என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அவசியமான கருத்துக்களை ஒரு மொழிக்கு தருவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் தவறான கருத்துக்களையும் அரைகுறைக் கருத்துக்களையும் மொழிக்குத் தராமல் இருப்பது. அவ்வாறு செய்வது மொழிக்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகம்.

பிளேட்டோவிலிருந்து தொடங்குகின்ற அரசியல் சிந்தனைகள் காலவரிசையின் அடிப்படையில் செல்வது போல எழுதப்பட்டுள்ளது. ஆனால் இடையில் திடீரென 'மகாத்மா காந்தியின் அரசியல் சிந்தனைகள்' வருகின்றன. இவை சிந்தனைகளின் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியவை. மார்க்ஸியம், ஹெகலின் சிந்தனைகளுக்கு முன்னர் 'மகாத்மா காந்தியின் அரசியல் சிந்தனைகள்' வரமுடியாது. கடைசிச் சிந்தனையாக 'ஜனநாயகம்' வருகின்றது. சிந்தனையாளர்களை மையப்படுத்திய நூலின் போக்கில் இவ்வத்தியாயம் தேவையற்றது என்றே கருதுகிறேன். ஆசிரியரின் முந்தைய நூலான 'அரசியல் மூல தத்துவங்கள்' நூலில் உள்ள 'சனநாயகம்' என்ற அத்தியாயத்தில் உள்ள அதே விடயதானமே சில மாற்றங்களுடன் இப்புதிய நூலில் இடம்பெறுகிறது. இதுவே நூலின் நோக்கத்தையும் தேக்கத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. பக்கங்களை நிரப்பி கனதியாக புத்தகம் போலக் காட்டும் உத்தியே இது. இதைப்போலவே நூலில் இடம்பெறும் 'அராஜரீகக் கோட்பாடு' என்ற அத்தியாயம் 'அரசியல் மூல தத்துவங்கள்' நூலில் உள்ள 'அராஜகம்' என்ற பகுதியிலிருந்து எடுக்கப்பட்டு சில மாற்றங்களுடன் தரப்படுகிறது. இந்த நூலில் உள்ள 'தாராண்மைவாதம்' என்ற அத்தியாயம் இவரது 'அரசியல் மூல தத்துவங்கள்' நூலில் உள்ள 'தாராண்மைவாதம்' பகுதியின் மாற்றங்களற்ற மீள் பிரசுரிப்பே.

'அரசறிவியல் மூல தத்துவங்கள்' எவ்வாறு 'உயர்தர அரசியல் சிந்தனைகளாக' மாறியது என எனக்கு விளங்கவில்லை. இது வாசகர்களை ஏமாற்றி வேறு




வேறு தலைப்புகளுடன் ஒரே விடயத்தைச் சொல்லும் வியாபாரப் புத்தியாகவன்றி வேறெதுவாக இருக்க முடியும். தேடலில் கவனமின்மை, மேம்போக்காக எதையும் எழுதித் தப்பிக்கலாம் போன்ற எண்ணப்பாடுகளின் வெளிப்பாடுகள் தான் இவை. அநேகமான சிந்தனைகள்(?) ஆங்கில நூல்களில் இருந்து அப்படியே மொழிபெயர்க்கப்படுகின்றன. இதனால் ஒரு தெளிவில்லாத, ஒழுங்குபடுத்தப்படாத மொழிநடையை நூல் முழுவதிலும் காணலாம்.

பிளேட்டோ, அரிஸ்டோட்டில் என்று பேசும் போது அவர்களுடைய 'குடியரசு' நூலையும், 'அரசியல்' நூலையும் அடிக்கடி உதாரணம் காட்டும் ஆசிரியர். அகஸ்தீன், அக்குவானஸ் போன்றோர் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களது நூல்களைப் பற்றி குறிப்பிடவே இல்லை. அவை அவருக்கு தெரியாதிருக்க வாய்ப்பில்லை என நம்புகிறேன்.

ஆசிரியர் சிந்தனையாளர்களின் பெயரையே மாற்றித் தந்துள்ளார். பயனுடைவாத சிந்தனையாளராகிய ஜெரமி பெந்தாம் (Jerramy Bentham) ஆசிரியரால் ஜேம்ஸ் பெந்தாம் எனக் குறிப்பிடப்படுகிறார். சிந்தனைகள் நெடுகிலும் ஆசிரியர் பல சிந்தனை முத்துக்களை உதிர்த்துள்ளார்.

*"ஒரு ஜனநாயகப்போக்குள்ள அரசியல் கோட்பாட்டாளர்களில் முதலாவது தத்துவாதியாக கருதப்பட்டார்"* (பக். 42)

என ரிச்சாட் கூக்கரைச் சொல்கிறார் ஆசிரியர். மிக அருமையாக கண்டுபிடிப்பு இது.

அதேபோல

*"கற்பனா சோசலிஸ்டுகள் சமூகத்தினை மறுசீர் செய்ய வேண்டும் என்பதற்கான கோட்பாட்டுச் சாத்தியங்களை உருவாக்க முயற்சித்ததோடு கொம்யூனிஸ்ட் சமூகம் பற்றி புத்தி சாதுரியமான பல கோட்பாடுகளையும் முன்வைத்தனர்"* (பக். 63)

இவர் சொல்கின்ற 'புத்திசாதுரியம்' என்னவென்று எனக்கு இப்போது புரிகிறது. இப்புத்தகத்தை வாசிக்கும் அனைவருக்கும்கூட அது தெளிவாக விளங்கும். இவ்வாறு அடிப்படைகள் எதுவுமற்று விற்பனைக்காக எழுதப்பட்ட, அல்ல, தொகுக்கப்பட்ட ஒரு நூலாகத்தான் இதைக் கருதமுடியும்.

இந்நூலின் உயர்தர அரசியல் சிந்தனைகளை புரிந்துகொள்ள ஒரே ஒரு உதாரணம் போதுமானது.

*"முதலாளித்துவத்திலிருந்தான அடுத்தகட்டம் சோசலிசம் அல்லது கொம்யூனிசம் என மார்க்ஸ் எதிர்வு கூறினார்"*

(பக். 87)

இதைவிட ஒரு உயர்தர சிந்தனையை வேறு யாராலும் கூற முடியாது (ஆசிரியரைத் தவிர). சோசலிச சமுதாயத்தில் அரசு இருக்கும் என்றும் சோசலிச சமுதாயத்தின் அடுத்த கட்டமே கொம்யூனிச சமுதாயம் என்றும் அதில் 'அரசு உதிர்ந்துவிடும்' என்றுதான் மார்க்ஸ் சொன்னார். 'சோசலிசம் அல்லது கொம்யூனிசம் என்று மார்க்ஸ்' சொல்லவே இல்லை. பாவம் ஆசிரியர். குழப்பமான தெளிவில் புரிதல்கள் இன்றி இருக்கிறார் என நினைக்கிறேன். அதிகார பீடங்களில் அமர்ந்திருப்பதால் இப்படியெல்லாம் செய்வது சரியானது போல தெரியலாம். ஆனால் இவ்வாறான எழுத்தானது ஒரு ஏகபோக போக்கே. வியாபாரத்துக்காக எழுதுவதால் தவறாகக் கருத்துக்களைச் சொன்னதற்காக ஆசிரியரை மன்னிப்போமாக.

இவையெல்லாம் நான் சுட்டிக் காட்டிய சில உதாரணங்களே. கோட்பாட்டுத் தவறுகள், தகவல் தவறுகள் என ஏகப்பட்ட குழறுபடிகள் புத்தகமெங்கும் நிறைந்து கிடக்க முன்னுரையில் ஆசிரியர் சொல்கிறார் :

*" இந்நூல் அரசியல் சிந்தனையினை வடிவமைத்த சிந்தனைகள் பற்றிய நம்பிக்கையான தகவல்களை தரும் வழிகாட்டியாகும்"*

சிந்தனையில்லாத சிந்தனைகள் எப்படியிருக்கும் என அறிய ஆசைப்படுபவர்கள் 250 ரூபாய் செலவழித்து வாங்கிப் படிக்கலாம். இன்றைய வியாபார உலகின் இன்னுமொரு விற்பனைச் சரக்கு இந்த 'உயர்தர அரசியல் சிந்தனைகள்'. இதை பிரபல்யப்படுத்தவும் வாங்கிப் படிக்கச் சொல்லவும் நிறையப் பேர் இருப்பதால் நிறைய விற்பனையாகி பல பதிப்புகளைப் பெற வாழ்த்துக்கள்.

**-எல்.சப்**

---

### போர்க்களத்தில்...

3ம் பக்கத் தொடர்ச்சி

களமாக மட்டுமன்றி பாகிஸ தானுடைய ஆதிக்க களமாகவும் மாறியிருப்பதையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

அவை யாவும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவ தாகவும், தமிழ் மக்களுக்கு உதவுவதாகவும் தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் இலங்கை அரசாங்கமோ இணைத் தலைமை நாடுகளும், இந்தியாவும், பாகிஸ்தானும் தமக்கு ஆதரவாக இருப்பதாக நம்பு கிறது. தமிழ் மக்களோ இணைத் தலைமை நாடுகளும் இந்தியா வும் தங்களுக்கு ஆதரவாக இருக்கும் என்று இன்றும் கூட நம்புவதாகவே தெரிகிறது.

இணைத் தலைமை நாடுகளாலோ இந்தியாவாலே யுத்தத்தை நிறுத்தவோ மக்க ளின் அவலத்தை போக்கவோ முடியாது. யுத்தத்தை நிறுத்து வதற்காகவும், மக்களின் அவலத்தை போக்குவதற்காகவும் நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக தொடர்ந்தும் பாசாங்கு செய்து கொண்டிருக்கலாம்.

யார் என்ன சொன்னாலும் தற்போது நடைபெறும் யுத்தச் சூழ்நிலையில் வெளிநாட்டுச் சக்திகள் அவற்றின் அக்க றைகளை கருத்திற் கொண்டே செயற் படுகின்றன. அவை தெளிவுடனேயே செயற்ப டுகின்றன. ஆனால் இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையகத் தமிழ் மக்களுக்குத் தான் இன்னும் தெரியவில்லை.

இந்த யுத்த சூழ்நிலையில் ஆட்கடத்தல்கள் கொலைகள் கைதுகள் பற்றி ஆராய சர்வதேச விசாரணைக் குழுவொன்றை அமைக்கவிருப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இது மிகவும் வேடிக்கையானது. அத்துடன் இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இது பாரதூர ஜனநாயக மறுப்பு, அராஜக சூழ்நிலைக்கு நாட்டையும் மக்களையும் தள்ளும் முயற்சியாகும். தமிழ் மக்களின் மீது யுத்தத்தை திணித்த அவ்விரண்டு கட்சிக ளினதும் வரலாற்றைத் தெரிந்த வர்கள் அவை இரண்டும் ஐக்கியப்படுவதனால் தமிழ் மக்களுக்கு பாதிப்பே ஏற்படும் என்பதை அறிவார்கள். அத்துடன் ஏகாதிபத்திய உலக மயமாதலை ஏற்றுக் கொண்டுள்ள அவை இரண்டும் இந் நாட்டின் தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு எதிராக அடக்குமுறைகளை கூட்டாக மேற்கொள்ளவே வாய்ப்பு இருக்கிறது.

தமிழ் மக்களை தாக்கி அவர்கள் மீது அவலங்களை திணித்து சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தோற்க டிக்கலாம் எனத்தை மஹிந்த அரசாங்கம் மட்டுமல்ல அவருக்கு முன்பிருந்த எல்லா அரசாங்கங்களும் நினைத்தன.

அந் நினைப்புகள் பிழையா னவை என்றாலும் காலத்திற்கு காலம் மேலெழுகின்றன. தமிழ் மக்கள் மீதான தாக்குத ல்களினூடாக அந் நினை ப்புகள் நிறைவேறப் போவதில்லை. சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்படும் வரை போராட்டங்கள் பல பல வடிவங்களில் தொடரத்தான் போகிறது.

இந்தப் படிப்பினைகளுடன் அனைத்து ஜனநாயக, இடதுசாரி, புரட்சிகர மக்கள் செயற்பாட்டாளர்களும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் பல வழிகளிலும் ஈடுபட்டுள்ளோரும் தற்போதைய சூழ்நிலையில் யுத்தத்திற்கு எதிராகவும், சமாதான வழியில் தமிழ் மக்களுக்கும் ஏனைய அடக்கப்படும் தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி சமத்துவம் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வை காண்பதற்கான அழுத்தங்களை கொடுக்கும் மக்கள் இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். அவ்வியக்கங்கள் அந்நிய சக்திகளின் திட்டங்களுக்காக செயற்படுவனவாகவன்றி நேர்மையான மக்கள் இயக்கங்களாக செயற்பட வேண்டும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்




REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று14 செப்ரெம்பர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 95

## நடமாடும் கலைஞர்களின் இசைநிகழ்ச்சி

நடமாடும் கலைஞர்களின் மக்களுக்கான இசை நிகழ்ச்சி எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி மாலை 6.30மணிக்கு கொழும்பு திம்பிரிகஸ்யாயவிலுள்ள லும்பினி மண்டபத்தில் நடைபெறும். மக்கள் மத்தியில் சென்று மாற்று இசை நிகழ்ச்சிகள் பலவற்றை மக்களின் பங்குபற்றலுடன் செய்துள்ள இக்குழுவினரின் முயற்சி பாராட்டுதற்குரியது.

# மலையகத்தில் அம்மண ராஜாக்கள்




இ. தொ. கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இளைஞர் வலுப்படுத்தல் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் இ. தொ. காவை சார்ந்த முத்துசிவலிங்கம் தோட்ட உட்கட்டமைப்பு பிரதியமைச்சராகவும், எம். சச்சிதானந்தன் பிரதி கல்வியமைச்சராகவும், மலையக மக்கள் முன்ன ணியின் தலைவர் பெ. சந்திரசேகரம் சமூக அபிவிருத்தி, சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு அமைச்சராகவும், ம. ம. மு சார்ந்த பெ. இராதா கிருஸ்ணனுக்கு பிரதி தொழிற்பயிற்சி அமைச்சராகவும் பதவி ஏற்றுள்ளனர்.

அரசாங்கம் வடக்கு கிழக்கிற்கு யுத்தத்தை நடத்தி கொண்டிருக்கிறது செஞ்சோலை 61 சிறுவர்கள் உட்பட பல சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அல்லைப்பிட்டி தேவாலய தலைமைபிதா கடத்தப்பட்டுள்ளார். மூதூரிலிருந்து முஸ்லீம்களும், தமிழர்களும் இடம்பெயர்ந்துள்ளனர். நாளாந்தம் பலர் வடக்கு கிழக்கிலும் வடக்கு கிழக்கு வெளியிலும் கடத்தப்பட்டு வருகின்றனர். பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். சோதனைகள் விசாரணைகள் என்றபேரில் தமிழ் மக்கள் இம்சைக்குட்ப டுத்தப்படுகின்றனர். தமிழர்களின் விபரங்களை பொலிஸார் திரட்டி வருகின்றனர். அரசியல், சமூகரீதியான முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் கடத்தப்படுகின்றனர்.

இவ்வேளையில்தான் மலையகத்தமிழ் எம். பிக்கள் அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் பதவி ஏற்றுள்ளனர். தமிழ்மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இ. தொ. கா அரசுடன் இணைந்து கொண்டு அமைச்சர் பதவிகளையும் எடுத்ததாக ஆறுமுகன் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு காண்பதற்கு அரசிற்கு ஆதரவளிப்பதற்காகவே ம. ம. மு அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு அமைச்சுப்பதவிகளையும் பெற்றுக் கொண்டுள்ளதாக ம. ம. மு தலைவர் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார். அவரது கட்சியின் கொழும்பு மாவட்டத் தவைலரும் பிரபல வர்த்தகருமான சிவகாந்தன் அவரது கடையிலிருந்து சி. ஐ. டியினர் என்று கூறப்பட்டவர்களால் ஆகஸ்ட் 24 ஆம் திகதி கடத்தப்பட்டார். அவரைப் பற்றிய தகவல் எதுவுமே இல்லாத நிலையில் 25 ஆம் திகதி ம. ம. மு தலைவரும், உபதலைவரும் அமைச்சர்களாகி விட்டனர்.

கிளிநொச்சியில் அவரது இதயம் இருப்பதாக கூறிவந்த சந்திரசேகரனுக்கு செஞ்சோலையில் 61 இளம் இதயங்கள் கொல்லப்பட்டதையோ, கொழும்பில் அவரது மாவட்டத்தலைவர் கடத்தப்பட்டதையோ உணரமுடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்குத்தான் கிளிநொச்சியிலும் மவுசு இருந்தது.

பம்பேகமவிலும், பெல்மதுளையிலும் மலையகத்தமிழர்கள். பேரினவெறியர்களால் அடித்து துரத்தப்பட்டனர். கேகாலை, இரட்னபுரி, களுத்துறை மாவட்டங்களில் மலையகத்தமிழர்கள் நாளாந்தம் தாக்கப்படுகின்றனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் சம்பளம் உயர்த்தப்படவில்லை.

நிலை இவ்வாறிருக்கும் போது அமைச்சர்களாகியுள்ள மலையக எம். பிக்கள் குழந்தைக்கு மட்டுமே தெரிந்த அம்மண ராஜாவையே நினைவு படுத்துகின்றனர். அம்மணமாக இருந்த ராஜா அழகான உடைகளை அணிந்திருந்ததாக அவரின் அமைச்சர்களும் பிரஜைகளும் தெரிவித்தனர். ஒரு குழந்தை மட்டுமே ராஜா அம்மணமாக இருப்பதாக தெரிவித்தது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். தற்போதைய சூழ்நிலையில் அந்த குழந்தையின் நிலைமையில் அதிகமான மக்கள் இருக்கின்றனர். அம்மண ராஜாக்களை போற்றி புகழ மக்கள் தயாராக இல்லை.

அதிகாரத்திற்கும், சுயலாபத்திற்காகவுமே இ. தொ. கா, ம. ம. மு தலைவர்கள் அமைச்சர்களாகியுள்ளனர். நாட்டிற்காகவும், மக்களுக்காவும் என்று அவர்கள் சொல்வதை யார்தான் நம்புவார்கள்? ■

## நுவரெலியா வைத்தியசாலையில் மலையக கருவள அழிப்பு

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் தோட்டப்புற பெண்களை நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கி குடும்பக கட்டுப்பாட்டு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாக புதிய பூமிக்கு தகவல்கள் கிடைத்து வருகின்றன. மகப்பேற்றுக்காக நுவரேலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் தோட்டப்புற தாய்மார்களில் அனேகர் மகப்பேறுக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாட்டு சத்திரசி கிச்சைக்கு ட்படுத்தப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது.

இரண்டாவது, மூன்றாவது பிள்ளைகளை இயல்பான பிரசவத்தின் மூலம் பெற்றிருந்தபோது ஏறக்குறைய எல்லா தோட்டப்புற தாய்மார்களும் குடும்பக்கட்டுப்பாட்டு சத்திரசி கிச்சைக்குட்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. தாயின் உடல் பலவீனமாக இருப்பதாக கூறியே அவ்வாறு தோட்டப்புற-மலையகத்தமிழ் தாய்மார்களின் கருவளம் அழிக்கப் படுகிறது. அச்சத்திரசிகிச் சைக்கு சம்மதிக்காத தாய்மார்கள் பிரசவத்திற்குப் பின்பு வைத்தியசா லையிலேயே நீண்டநாட்கள் தடுத்து வைக்கப்பட்டு நிர்ப்பந்திக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இது பற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதும் நுவரேலியா மாவட்ட வைத்தியச ாலையின் பிரதான வைத்தியர் அவற்றை கவனத்தில் எடுப்பதாக தெரியவில்லை. அவர் அவரது கருவறுக்கும் சிகிச்சையில் பிடிவாதமாக இருக்கிறாராம்.

மலையகத் தாய்மார்களின் கருவளம் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன என்று பரவலாகவே முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இன ரீதியாக ஒடுக்கும் வகையில் மலையகத்தமிழர்களின் குடிசன அதிகரிப்பை தடுக்கும் வகையிலே அவ்வாறு செய்யப்படுகிறது என்பது பொதுவான குற்றச்சாட்டாகும்.

ஒரு பெண் விருப்பத்தின் பேரில் கருவள அழிப்பு சிகிச்சை செய்துகொள்வதை யாரும் தடுக்க முடியாது. அறியாமை, நிர்ப்பந்தம், பயமுறுத்தல், ஏமாற்றுதல் போன்ற வற்றினால் அதிகமான மலையகத்தமிழ் பெண்களின் கருவளம் அழிக்கப் படுவதாகவே முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதற்கு எதிராக அடக்கப்படும் தேசிய இனம் கிளர்ந்தெழுமா? ■

## சம்பள உயர்வைப் பெறமுடியாதவாறு தொழிற்சங்கங்கள் துரோகமிழைக்கின்றன

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக ரூபா.350வது வேண்டுமென்று தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற போதும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வருகின்ற இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பன மட்டுமன்றி அவற்றை விமர்சித்து வந்த ஏனைய தொழிற்சங்கங்களும் கூட்டாகச் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு துரோகமிழைக்கப் போகின்றன என்பது தெளிவாகிவிட்டது.

கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுபவர்கள் மட்டுமன்றி ஏனைய தொழிற் சங்கங்களும், முற்போக்கு பேசும் சில என்.ஜி.ஓ.காரர்களும் சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்ளப் பொது நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்று பலமுறை கூடி இணைந்தனர். அது பற்றி அறிக்கையொன்றையும் விட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின்படி அவர்கள் சம்பள உயர்வைக் கேட்காமல் வேறேதேதோ கேட்கின்றனர். கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட முடியாத விடயங்களைக் கேட்கின்றனர். அரசாங்கம் செய்ய வேண்டிய பல விடயங்களை தோட்டக் கம்பெனிகள் செய்து தர வேண்டுமென கேட்டு ள்ளனர். அத்துடன் பல சில்லறை கோரிக்கைகளையும் முன் வைத்து ள்ளனர்.

சம்பள உயர்வு பற்றிய கோரிக்கையை மிகவும் பொதுவானதா கவும், சாதாரணமானதாகவும் கணித்து ள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப் பிற்கு ஏற்ப சம்பள உயர்வை கேட்பதென்றும், அடிப்படைச் சம்பளத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தும் வகையில் சம்பள உயர்வை கேட்பதென்றும் தீர்மானித்துள்ளனர்.

இது தோட்டத் தொழிலா ளர்களுக்கு மிகவும் ஏமாற்றத்தை தருகின்ற நிலைப்பாடாகும். இதற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் சுதந்திரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதுடன், சம்பள உயர்வை பெற்றுக் கொள்வதற்கான மாற்றுவழிகள் பற்றி சிந்திப்பது நல்லது. ■

வெளியிடுவர் : இ. தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்ரல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334பு.மு. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்